www.padippakam.com

# கடல்

அலை 05 Aug. 1991

சமுதாய சஞ்சிகை

CHAN... anmarksgade ... 7500 Holstebro Danmark




# கடல்

அலை 06 Sept 1991

சமுதாய சஞ்சிகை

படிப்பகம்

# கடல்

கடல் ஆக்கதாரர்களின் கருத்துகளுக்கு பூரண சுதந்திரம் அளிக்கிறது. கருத்து மோதல்களுக்கு கடல் களமாக விரும்புகிறது.

ஆசிரியர் குழு :

சுழியோடிகள்

**பேசாதீர்கள் செயல்படுங்கள்;**

**அறிவிக்காதீர்கள் செய்து காட்டுங்கள்**

சிறுவர்கள் எழுதும் ஆக்கங்களும், சிறுவர்களுக்காக பெரியவர்கள் எழுதும் ஆக்கங்களையும் அலங்கரிக்க 'மழலைப்பட்டாளம்' என்ற பகுதி காத்திருக்கின்றது.

எழுதுங்கள் வரவேற்கின்றோம்

ஆசிரியர் குழு கடலோடிகள்

'கடல்' இலவசமாக வெளிவர... இந்த லங்கன்பீல்ட் நகர தமிழ் மக்களுக்கு பல வருடமாக தன்னாலான சரீர உதவிகளை செய்து வரும் 'நோறி' [FRAU. KIRBERG] அவர்களுக்கும், PASTOR & HORST-WALTER LAND அவர்களுக்கும் இவர்களின் அறிமுகத்துக்குப் பின்னணியிலுள்ள திரு. R. சுந்தரேஸ்வரன் அவர்களுக்கும் எமது நன்றிகள் உரித்தாகுக.

Kadal சுழியோடிகள்

www.padippakam.com

www.padippakam.com

# மழலைப் பட்டாளம்



## -சிறுவர் பகுதி-

### முத்துக்குளித்தல் இலக்கம் 2

---

1) கடல் என்பது போன்ற ஒலிச்சத்தம் உள்ள வேறு மூன்று சொற்கள் எழுதுங்கள். உதாரணம்=உடல்

2) கடலின் மேலாகச் செல்வன கப்பல்,வள்ளம்,கட்டுமரம், தோணி என்று பல உள்ளன.நீரினுள்ளாகப் பிரயாணம் செய்யப் பயன்படுவதற்கென்ன பெயர்?.

3) நான்கு பக்கமும் கடலாற் சூழப்பட்டிருப்பதைத் தீவு எனச் சொல்கின்றோம்.மூன்று பக்கம் கடலாற் சூழப்பட்டிருப்பதை என்னென்று சொல்கின்றோம்?

4) இலங்கையின் கிழக்குக் கரையோரமாகத் திருகோணமலைக்கு வடக்காகத்தீவு என்று முடியும் ஓர் ஊர் உள்ளது. அதன் பெயர் என்ன?

5) அண்மையில் (01.08.91) ஐரோப்பாவில் ஒரு சிறியநாடு தனது 700ஆவது பிறந்ததினத்தைக் கொண்டாடியுள்ளது.அந்த நாட்டின் பெயர் என்ன? அதன் தலைநகரின் பெயர் என்ன?

விடைகளை 18·09·91 ற்கு முன்னர் பிந்தாமல் கடல் சஞ்சிகையின் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.'பானை நிறைய அறிவு'என்னும் சிரிப்புக்கதைப் புத்தகம் முத்தாகக் காத்துக் கொண்டிருக்கின்றது.



படிப்பகம்

முத்துக்குளித்தல் 1ன் முடிவுகள்

1) ஆழி,பரவை,வேலை,சமுத்திரம்

2) உப்பு,முத்து,மீன்போன்ற கடலுணவுகள், எரிபொருள் எண்ணெய்,பலவகையான இரசாயனப் பொருட்கள்

3) திமிங்கிலம் அது ஆழ்கடலில் வாழ்கின்றது.

4) நெல்

5) யூக்கோஸ்லேவியா தலைநகரம் பெல்கிரேட்

முதலாவது முத்துக்குளித்தலில் பலர் கலந்துகொண்டு முயற்சித்திருக்கின்றார்கள். இவர்களில் ஐந்து சரியான விடைகளையும் எழுதியவர்கள்

செல்வி.பிங்கலை-இராஜேஸ்வரன் 5013 Elsdorf/Rhld
செல்வி.தர்மிளா-கலாநிதி 5202 Hennef/Rott

நாலு சரியான விடைகளை எழுதியவர்கள்

செல்வன்.க.துசாந்தன் 4100 Duisburg 11
செல்வன் சிவாஸ்கர் சிவராஜா 4100 Duisburg28
செல்வி சிவதர்சினி சிவராஜா 4100 Duisburg 28
செல்வி சிறிகௌரி கிருஸ்ணபிள்ளை 3203 Sarstadt
செல்வன் லிங்காதரன் கமலநாதன் 5650 Solingen 1
செல்வி தர்சினி கமலநாதனி 5650 Solingen 1
செல்வன் கே.வினோத் 4150 Krefeld

இவர்களில் செல்வி தர்மிளா கலாநிதி 5202 Hennef/Rott "விகடராமன் கதைகள்" என்ற முத்தைப் பெறும் வீராங்கனையாகின்றார். ஏனைய எல்லோரும் பாராட்டுகள் பெறுவதுடன் அடுத்த முத்துக்குளித்தலுக்கும் தயாராகின்றனர்.

கடந்த மாத முத்துக்குளித்தலில் 'உலகிற் பெரிய மிருகம் எது என்பதிலும்,ஜேர்மனியில் கோதுமை போல இலங்கையில்

எது என்பதிலும் பலருக்குக் குழப்பமாக இருந்திருக்கின்றது. உலகில் வாழும் மிருகங்களில் திமிங்கிலந்தான் பெரியது. அது கடலில் நீர்க்குள் வாழ்ந்தாலும் ஏனைய கடல்வாழ் உயிரினங்களைப் போல நீரினுள் தோலினால் சுவாசிப்பதில்லை. எந்த ஒரு திமிங்கிலமும் நீரினுள் ஆகக்கூடியது இருபது செக்கன்களுக்கு மேல் இருக்கமாட்டாது.காற்றைச் சுவாசிப்பதற்காக அது வெளியே வரவேண்டியுள்ளது. தரையில் வாழும் பெரிய மிருகம் என்றால் அது யானையையே குறிக்கும். ஜேர்மனியில் கோதுமை முக்கியமான உணவாக உள்ளது. அதைப்போல இலங்கையில் நெல்(அரிசி)முக்கிய உணவாக உள்ளது.சிலர் நெல் என்று எழுதாமல் தேயிலை என்று எழுதியிருக்கின்றார்கள். தேயிலை இலங்கையின் முக்கிய ஏற்றுமதிப் பொருளாக இருப்பது போல ஜேர்மனியின் முக்கிய ஏற்றுமதிப் பொருளாகக் கோதுமையில்லை.

## தெரிந்துகொள்ளுங்கள்

●● பிறந்த இடமே பகையாக உள்ளவற்றில் உப்பும் ஒன்றாகும்.


●● கடல் நீரை உப்பென்று சொல்லிவிடுகின்றோம் அல்லவா? ஆனால் கடல்நீரில் உப்பு மிகக் குறைந்த அளவில் 4சதவீமே உள்ளது.

●● உலோக வகைகளில் உறுதிகூடியது வைரம்.

●● விஞ்ஞானம் இன்று ஓசோன் எனப்படும் காற்றுத் தொகுதியை நாசம் செய்து கொண்டிருக்கின்றது.இதனால் பலவிதமான நோய்கள் ஏற்படத்தொடங்கிவிட்டன. காலநிலையிலும் பெரிய மாறுதல்கள் ஏற்படத் தொடங்கியுள்ளன.இந்த ஓசோன் காற்றின் படிவுகளால் நாம் சுவாசிக்கும் காற்றை இரத்தம் பெற்றுக் கொள்ள முடியாமல் செய்துவிடுகின்றது.ஆஸ்மா என்ற நோயையும் இந்த ஓசோன் காற்று உண்டாக்குகின்றது.

www.padippakam.com

# ரைன்டீர் என்னும் கலைமான்கள்



பூமியின் வடக்கேயுள்ள மிகுந்த குளிரான பிரதேசங்களில் வாழும் மான் இனம் ரைன்டீன் என அழைக்கப்படுகின்றது.இந்த இன மான்களுக்கு மட்டுமே ஆண் பெண் இரண்டிற்கும் கொம்பு இருக்கின்றது. ஏனையவற்றில் ஆண் மானுக்கு மட்டுமே கொம்பிருக்கின்றது. பனியில் நடப்பதற்கு ஏற்றதாக அகன்ற பெரிய காற்குளம்புகள் அமைந்திருக்கின்றது.ஐந்து அடி உயரம் வரை வளர்கின்றன.அடர்ந்தமயிர்கள் இருப்பதால் குளிரைத் தாங்கிக் கொள்ளுகின்றன.

பெருங்கூட்டமாகவே செல்கின்றன.ஓநாய்கள்தான் இவற்றின் எதிரிகள்.ஓநாய்களிடமிருந்து தப்பிக்கொள்ள வழுக்கும் பனிக்கட்டிகளிலும்,தீவு போன்ற இடங்களிலும் தங்குகின்றன.ஓநாய்களின் காற்பாதம் வழுக்கும் இடங்களில் நடக்க முடியாமல் அமைந்திருப்பது இவற்றிற்குப் உதவியாக உள்ளது.ஓநாயைவிட அதிக பலமும்,பலமான கொம்புகள் இருந்தும் இவை ஓநாய்களால் வேட்டையாடப் படுகின்றன.

தங்களுக்குள் சண்டை செய்து அதற்காகவே சாகின்ற இந்தக் கலைமான்களால் ஓநாயை எதிர்த்துச் சண்டையிட முடியாதிருப்பது விந்தையாகவே இருக்கின்றது.பனிப் பிரதேசங்களில் வாழும் எஸ்கிமோவர்கள் இந்தக் கலைமான்களைப் பிடித்துப் பழக்கிப் பாரம் சுமக்கவும் வண்டி இழுக்கவும் பயன்படுத்துகின்றனர். இவற்றின் பால் தோல் இறைச்சி கொம்பு என்பன பயன்படுகின்றன.

www.padippakam.com

## உண்மையான கல்வி

ஒரு கிராமத்தில் கண்ணன் என்ற சிறுவன் இருந்தான்.அவனுக்குப் படிப்பில் நல்ல விருப்பம்.ஆனால், அவனுடைய கிராமத்தில் பாடசாலை இல்லை.இதனால் அவனுக்கு ஒரே கவலையாக இருந்தது.ஏதோ தன்னுடைய முயற்சியில் எழுத வாசிக்கக் கற்றுக்கொண்டான்.

அந்தக் கிராமத்திற்கு ஒருநாள் ஒரு பெரியவர் வந்தார்.கண்ணனின் படிப்பு ஆர்வத்தைக் கண்டார். கண்ணன் மேலும் படிக்கமுடியாமல் இருப்பதையும் அறிந்து கொண்டார்.கண்ணனுக்கு உதவிசெய்ய வேண்டும் என்று விரும்பினார்.தனது ஊரில் முனிவர் ஒருவர் பாடம் சொல்லிக் கொடுக்கின்ற விபரத்தைச் சொன்னார். கண்ணனும் தான் அவரிடம் சென்று கல்வி கற்க விரும்புவதாகச் சொன்னான்.

பெரியவர் கொடுத்த முகவரியுடன் கண்ணன் முனிவரிடம் சென்றான்.அங்கே முனிவர் கத்தி,அலவாங்கு கோடரி செய்யும் இரும்புப் பட்டறை வேலை செய்து கொண்டிருந்தார்.கண்ணன் அவரிடம் தான் படிக்க வந்த விடயத்தைச் சொன்னான்.அதற்கு அவர் தான் இயக்கிக் கொண்டிருந்த உலைத்துருத்தியை அவனிடம் கொடுத்து விட்டு வேறு வேலைகள் செய்யத்தொடங்கினார். கண்ணனும் முனிவர் சொன்ன வேலையைச் செய்து கொண்டிருந்தான்.

முனிவர் தன்னிடம் வந்தவர்களிடம் கதைத்துக் கொண்டிருந்தார்.கண்ணனிடம் எதுவும் கேட்கவில்லை. கதைக்கவுமில்லை.இப்படியே சிலநாட்கள் சென்றன. ஒருநாள் கண்ணன் முனிவரிடம்'ஐயா நான் தங்களிடம் கல்வி கற்க வந்தேன்'என்று தொடங்கினான்.அதற்கு முனிவர் நான் சொன்ன வேலையைச் செய்துகொண்டிரு! என்று சொன்னார்.கண்ணனுக்கு ஒரே ஆச்சரியமாக



படிப்பகம்

இருந்தது.படிப்புக்கும் உலைத்துருத்தியை இயக்குவதற்கும் என்ன தொடர்பு? ஏதோ இருக்கவேண்டும் என்று தனக்குள் சொல்லிக்கொண்டான்.

மேலும் சிலநாட்கள் சென்றன.கண்ணனை முனிவர் அழைத்தார்.உன்னுடைய கல்வி முடிந்துவிட்டது.இனி நீ உனதுடைய ஊருக்குப் போகலாம் என்றார்.வியப்படைந்த கண்ணன் ஐயா நீங்கள் எனக்கு எதுவுமே சொல்லித் தரவில்லையே என்றான்.அதற்கு அந்த முனிவர்'உலகத்தில் உள்ள எல்லாக் கல்வி முறைகளிலும் சிறந்தது பொறுமை தான்! உனக்கு அது ஏற்பட்டுவிட்டது.இனி நீ கற்பதற்கு எதுவுமில்லை.பொறுமை உள்ளவன் எல்லாம் கற்றவன் ஆகின்றான் என்று சொல்லி அனுப்பிவைத்தார்.

உலைத்துருத்தி = இரும்பில் ஆயுதங்கள் செய்வதற்கு, இரும்பை நெருப்பில் சூடாக்கி இளகச் செய்ய வேண்டும். இதற்கு இடைவிடாது நெருப்பு எரிந்துகொண்டிருக்க வேண்டும்.நெருப்புத் தொடர்ந்து எரிவதற்குக் காற்று வேண்டும்.காற்றை ஏற்படுத்தத் தொடந்து இயக்கப்படும் இதுவே உலைத்துருத்தி எனப்படுகின்றது.

பொறுமை

-------------

என்னை ஏதோ பெரிய விஞ்ஞானி அறிவாளி என்றெல்லாம் புகழுகின்றார்கள்.அந்தளவிற்கு நான் தகுதி உள்ளவன் என்பதைவிட உண்மையிலே விடமுயற்சி உள்ள பொறுமைசாலி என்பதே பொருத்தமானது

சேர்.ஐசக் நியூட்டன்

செயற்படும் ஒவ்வொருத்தரும் பேசுவதை மறந்துவிடுகின்றார்கள்

எராசின்

www.padippakam.com

பலர் மற்றவர்களுடைய கவனத்தைத் தம்மீது திருப்பிவிடலாம் என்றுதான் ஏதாவது ஒன்றையாவது பேசிக்கொண்டிருப்பது என்று முடிவு செய்துவிட்டார்கள்.
சேக்ஸ்பியர்

இரண்டு நிமிடங்கள் பேசுவதென்றால் இருபது நாட்களாக ஆயத்தம் செய்ய வேண்டும். இருபது நிமிடங்கள் பேசுவதுஎன்றால் எந்தவிதமான ஆயத்தங்களுந் தேவையில்லை.

** 36 சுந்திரப்பிதரேசங்களை ஒன்றிணைத்து ஜேர்மனி என்ற நாட்டை உருவாக்கியவர் பிஸ்மார்க்.1870ல் இது நடை பெற்றது.


** பொருளை ஆற்றலாக மாற்ற முடியும் என்ற ஐன்ஸ்டைனின் தத்துவமே அணுகுண்டு செய்யவழி வகுத்தது.ஐன்ஸ்டைன் ஜேர்மன் பௌதிகவிஞ்ஞானி ஆவார்.

** கிறீஸ்த்தவமதத்தில் புரட்டஸ்தாந்து மதப்பிரிவை உருவாக்கிய மாட்டின் லூதர்,பைபிளை ஜேர்மன் மொழியில் மொழிபெயர்த்து எழுதியவரும் அவர்தான்.

** உலகம் முழுவதற்கும் பொதுவான விஞ்ஞானச் சொற்கள் எல்லாம் லத்தீன் மொழிச்சொற்களாகும்.பொதுவான சொற்களைத் தொகுப்பதற்கு வழிகாட்டியவர் கார்ல் லின்னே என்ற சுவீடன் நாட்டவர்.இவர் வகைப்படுத்தி எழுதிய சொற்களே இன்று உலகம் முழுவதும் வழக்கில் உள்ளன.

** மிகவும் பிற்போக்கான நிலையில் இருந்த துருக்கி நாட்டை மாற்றிய பெருமைக்குரியவர் கமால் முஸ்தபா என்பவர். இவரைத் துருக்கிநாட்டவர் கமால் அதாதுர்க் என அழைக்கினறனர்.அதாதுர்க் என்றால் துருக்கியின் தந்தை என்று அர்த்தம்.சுல்தான்,கலிபா போன்ற கொடிய பதவிகளையும் பர்தா முறைகளையும் ஒழித்தவர் இவரே.

ஜேர்மன் மைதானத்தில் ஈ.ஆ.தமிழரின்
தடையோட்டம்.



www.padippakam.com

# இதற்கா வாழ்க்கை..?



திருமதி. க. கிருஷ்ணபிள்ளை

கண்கள் என இருமகனைப் பெற்றவர்கள்
கண்ணீரில் முடிந்துவிட்ட கதையைக் கேளீர்
பட்டணத்தில் தொழில் செய்து வாழ்ந்துவந்தார்
பட்சமுடன் மக்களையே காத்துவந்தார்
நாட்டில் நிலைமாறி நாளும் நாசமாக
நலிந்துவிட்டார் பெற்றவர்கள் என்ன செய்வர் ?
பறந்து வரும் 'செல்' அடிக்கோ பயந்து நின்றார்
பாலகரின் நிலைகண்டு மனம் பதைத்தார்
தொட்டிலிலே தூங்கும் ஒருபாலன் – பசியால்
துடிதுடித்தே வாடும் ஒருபாலன்
பட்டினியால் வாடும் இவ் முகத்தைப் பார்த்து
இயலாமை இளைபெற்றோர் மௌனமானார்
மைந்தர் முகம் பார்த்த தந்தை மனம் நொந்து
உண்பதற்கு உணவு ஏதும் வாங்கிவாறன்
உறங்கிடுவீர் மக்கள் என்று சொல்லிச் சென்றார்
தந்தை தமக்குணவுடனே வருவார் என்று
தனயனவன் தூங்கிவிட்டான் திண்ணைதனில்
கையிலுள்ள பாலகனைத் தூங்க வைக்க
தொட்டிலிடச் சென்ற அன்னை எதிர்பாரா
'செல்'லடியால் திகைத்து நின்றாள் உடல் நடுங்க
பாலனவன் தூங்கிகிறான் என்றே எண்ணி
பதைப்புடனே ஓடிவந்தாள் அன்னை அங்கு
குற்றுயிரும் குலையுயிருமாக மைந்தனவன்
குமுறுகின்ற காட்சிதன்னை அங்கு கண்டாள்
வற்றி உலர் நா வறண்டு வாய் திறந்து
பேசிடவும் வார்த்தை இல்லை அக்கணத்தில்
கதறி அழும் அன்னை முகம் பார்த்த மைந்தன்
பட்ட மரமாகத் தலை சாய்ந்துவிட்டான்
நீ பட்ட துயர் போதும் செல்வா அமைதி காண்பாய்
பரன் உனையும் அழைத்துவிட்டான் சென்றுவாடா

www.padippakam.com

என்றவளும் இயம்புகின்றாள் நிர்க்கதியாய்
தொட்டிலிலே தூங்கும் ஒரு பாலனுக்கு
உச்சி முகர்ந்தணைவளிக்க என்ன செய்வாள்
பாலகர்கள் பசிதீர்க்க உணவு தேடிச்
சென்ற தந்தை சுடுபட்டார் ஆமியாலே
செய்தி கேட்டு துடிக்கவில்லை குறைவில்லை
ஆண்மையாய் பிரமையுடன் சிலையேயானாள்
வெளிநாட்டில் பாடிச் செல்வர் பலரும் இதை
கேட்பார்கள் கவலையில்லை கதைப்பார்கள்
உணர்விழந்த மங்கையவள் உறவு இல்லை
உரிமை என்றோ சொல்வதற்கு எவருமில்லை.

• • • • • • •

# முத்தாரம்

கடல் சூழ்ந்த ஈழத் திருநாட்டில் நாம் பிறந்தோம். நம் நாட்டில் இடர் சூழ இந்நாட்டை வந்தடைந்தோம். 'மீண்டும் ஒளிதோன்றி எம் நாட்டில் மக்கள் மகிழ்வுறும் நாள் எந்நாளோ?' என்றெண்ணி ஏங்குகின்றோம். கடலே! கடல் இதழே!! கருகிவரும் எம் தமிழை உம் அலையால் பரப்பிடுவாய். கடல் மலரின் தரம் உயர்ந்து, உமது சேவை அறிவு சிறந்து மக்கள் அறிவு பெற உன் அலைக்கரத்தை உயர்த்திடுவாய்.

வாழ்க உமது சேவை.

வளர்க உமது புகழ்.

— திருமதி.க.
கிருஸ்ணபிள்ளை,
3203 SARSTEDT.

நான் 'கடலை' எடுத்தவுடன் தேடியது 'அதிமேதாவியின் அலசல் குறிப்புகளே'. ஆனால் சினிமா வியாபார நோக்குமானது. எனவே பாலசந்தர் போன்றவர்களும் வியாபாரிகளே.

— அ. விநோதன்,
4000 Düsseldorf.R

யார் அந்த இராமசாமி?! கடலுக்கு உப்புச் சேர்ப்பவரே அவர்தான். மற்றும், இம்முறை கடலில் எல்லாமே பாராட்டும்படி இருந்தது.

— செ. நல்லைநாதன்,
5000 KÖLN. 9



படிப்பகம்

www.padippakam.com

# சந்திப்பு

சோழியான்

சந்திப்பு என்றவுடன் ஐரோப்பிய தமிழ்ச் சஞ்சிகைகளுடன் பரிச்சயமானவர்களுக்கு உடனே நினைவுக்கு வருவது இலக்கியச் சந்திப்பாகும். ஆனால் இது அதுவல்ல. இது ஒரு கற்பனைச் சமாச்சாரம். இதைத் தொடராக எழுதுவதாக நோக்கம். இதைக் கதை என்று கூறுவதா அல்லது கட்டுரை என்று எடுத்துக் கொள்வதா என்பது எழுத ஆரம்பித்துள்ள எனக்கே தெரியவில்லை. எதற்கும் தொடர்ந்து படியுங்கள். அவ்வப்போது இதைப்பற்றி உங்களுக்கும் ஏதாவது எழுதத் தோன்றும். அவற்றை உடனே எழுதி விடுங்கள். ஏனெனில் கருத்துப் பரிமாற்றங்கள் சுதந்திரமாகச் செயற்படும்போதுதான் சில படிப்பினைகளோ அல்லது உண்மைகளோ உதாசீனப்படுத்தப்படாமல் இருக்கின்றன.

• • • •

சுகுமார், யோகேஷ், சந்திரன் என்ற மூன்று நண்பர்கள். ஒன்றாக வசிப்பவர்கள். ஒரே ஒரு அறை வாழ்க்கைதான். என்ன பெரிய அறை---?! அரசியல் தஞ்சம் கேட்டு அகதி என்று வந்தவர்களை பகுதி பகுதியாக அங்கே இங்கே கடதாசியில் கையொப்பம் வாங்கி, கைரேகை எடுத்து விரட்டி விரட்டிக் கடைசியில் எங்கோ ஒரிடத்தில் கொங்கக் கோலமானது--- முகவரிக்காகவாவது தங்கத்தானே விட வேண்டும் ?! அந்த வகையில் முன்பின் அறிமுகமில்லாமல் ஒரே அறையில் அமர்த்தப்பட்டவர்களே இந்த சுகுமாரும் யோகேஷும் சந்திரனும்.

இந்த மூவரும் ஒத்த மனப்பான்மை கொண்டவர்களல்ல. என்றாலும் ஒருவருக்கொருவர் சண்டை பிடித்துக் கொள்வதில்லை. காரணம், சண்டை பிடித்தால் அறைக்குள்ளேயே பேச்சுத் துணையில்லாமல் சுவரையும் முகட்டையும் பார்த்துப் பார்த்து மௌனமாக வேண்டிய பயமாகக் கூட இருக்கலாம்.

சண்டையில்லாவிட்டாலென்ன --- இருக்கவே இருக்கிறதே வாக்குவாதம். இதுதானே வெளிநாட்டுத் தமிழருடைய வேலையில்லாத பொழுதுபோக்குச் சாதனம். இந்த 'வேலையில்லாத' என்பதற்கு விதிவிலக்காக சிலர் உள்ளார்கள்.

"மச்சான்---பூனைக்குட்டி ஒண்டை திறந்து முன்னாலை வைச்சாத்தான் கதைக்கிறது அந்த மாதிரி இருக்கும்" என்று வாக்குவாதத்தைப் பூனைக்குட்டி மூலமாக ஆரம்பிப்பவர்களும் இ

ருக்கிறாங்கள். பூனைக்குட்டி உன்றைக்கிருந்து புலிக்குட்டியாக வராமலிருந்தால் சரி. கவனிக்கவும்— இங்கே பூனைக்குட்டி என்பது BLACK + WHITE விஸ்கியையும், புலிக்குட்டி என்பது வாந்தியையும் குறிக்கும்.

வாக்குவாதம் என்ற பெயரில் எவ்வளவு நேரமென்றாலும் கதைத்துக் கொண்டே போகலாம். அதனால் எந்தவிதமான பிரயோசனமும் ஏற்படாது என்று தெரிந்தபோதிலும்...! அதேவேளை எவ்விதமான நட்டமும் ஏற்படாது. ஏனெனில் கதைப்பதற்காக சேதல் காசை வெட்ட ஏட்டத்தில் இடமில்லை என்பது சொல்லாமல் தெரிந்ததுதானே?!

"சந்திரன்! இன்னும் சாமி கும்பிட்டு முடியேலையே. அப்பிடி என்னடா உனக்கு சாமியோடை நேசம்" என்று, பக்தியுடன் கண்களை மூடியபடி சாமி படத்தின் முன்னால் நின்று ஏதோ முணுமுணுத்துக் கொண்டிருந்த சந்திரனின் தியானத்தைக் குலைக்க முயற்சித்தான்.

"இப்ப உனக்கென்னத்துக்குச் சந்திரன்... அதுவும் இந்த விடியக் காலமை... முதல்லை போய் வாயைக் கொப்பிளிச்சுப்போட்டு வா. கடைவாய் ரெண்டிலையும் வீணி வடியுது..." என்று அலுத்தபடி கூறினான் யோகேஸ்.

"ஓமோம்... கடைவாயிலை வீணி வடியாமைத் தேனே வடியும்...?! இதுக்குப்போய் இப்பிடி அலுக்கிறியே... வீணி துடைக்கிற வேலை எங்கையாவும் நல்ல சம்பளத்தோடை இருக்கெண்டால்... அதுவும் பேப்பர் பதியாமை எண்டு விருத்துக்கப் போகிடுவியள்... "விடியவெள்ளெண்டா ஆரம்பிச்சா... சொந்த நேரம் கதையாமை இருக்கமாட்டியளோ... நிம்மதியாய் சாமி கும்பிடக் கூட வழியில்லை" என்று கத்தினான் சந்திரன்.

"எட சந்திரன்... இண்டைக்கு என்ன மச்சான் நடந்தது? ஒரு நாளுமில்லாமை சாமி படத்தோடை திருமோய் விட்டாய். ராத்திரி என்னவாவும் கனவு கினவு கண்டனியே" என்று கேட்டான் யோகேஸ்.

"கனவுக்கும் சாமிக்கும் என்ன சம்பந்தம்... சாமியே கனவிலை வந்து தன்னைக் கும்பிடச் சொன்னதெண்டோ... அப்பிடிச் சொன்னாலும் சந்திரனாவது கும்பிடுறதாவது..!! சாமிக்கும் மேலை ஏதோ ஒண்டு இருக்க வேணும். எட... எட... எட.... இப்பதான் ஞாபகம் வந்தது. அகதியளை எல்லாம் நாட்டுக்குத் திருப்பி அனுப்பப் போறதாய் பேச்சு நடக்குதெல்லோ....அதுதான் பொடியன் சாமியிட்டை 'சரண்டர்' ஆயிட்டான்."

"என்ன சந்திரன் அப்பிடியே... அதுக்கு தமிழ் சாமியிட்டைச் சொல்லி என்ன பலன்... அவருக்குத்தான் 'டொச்' தெரியாதே... யேசுநாதரிட்டைச் சொன்னாலும் ஏதாவது பிரயோசனம்." என்று கேலியாகக் கூறினான் யோகேஸ்.

"யேசுநாதருக்கு 'டொச்' தெரியுமோ தெரியாதோ எங்கடை சாமிக்கு 'டொச்' தெரியும். எத்தனை வருசமாய் இந்தச் சுவிசிலை கண்ணாடிக்கை தொங்கிறார். 'டொச்'

படிச்சிருப்பார். தமிழ்தான் மறந்திருப்பார்." – இது சுகுமார்.

"கதைக்கிறதுக்கு ஒண்டுமில்லையெண்டா சாமியைப்பற்றியோ ஆராய்ச்சி செய்யிறது? தேத்தண்ணி வைச்சீட்டீங்களோ--- ராத்திரி நானெல்லே கோப்பி போட்டனான். இப்ப ஆரெண்டாலும் போய் தேத்தண்ணி போட்டுக் கொண்டு வாங்கோ." என்றபடி வந்தான் சந்திரன்.

"எட சந்திரன்---தேத்தண்ணி என்னடா தேத்தண்ணி. தேத்தண்ணி போடுறது பெரிய வேலையே---- இப்ப அதைவிட ஒரு பெரிய பிரச்சினை. நீ ஏன் திடீரெண்டு சாமி இப்பிட வெளிக்கிட்டனீ?!--ஒரு நாளுமில்லாத புதினமாய்---அதை முதல்லை சொல்லு. பேந்து தேத்தண்ணி ஆர் போடுறதெண்டு யோசிப்பம்---"

"இண்டைக்கு அவசரகால நிதி சேர்க்க வாறாங்கள் எண்டு இவன் சண் சொன்னவன். அதுதான் அவங்கடை கண்ணிலை இண்ணிலை தட்டுப்படாமை என்னைக் காப்பாத்தெண்டு கடவுளிட்டை வேண்டினனான்."

"என்ன, அவசரகால நிதியோ--- இண்டைக்கு வாறாங்களாமோ--- போச்சுடா---மச்சான் யோசேப்! நான் இடத்தைவிட்டு மாறப்போறன். எங்கையாவும் காலாற நடந்துபோட்டு ராவைக்கு வாறன்."

"அவசரகால நிதி எண்டவுடனை ஏண்டா பயப்பிடுறியள்-- இருக்க விருப்பமில்லாட்டி விருப்பமில்லை எண்டு நேருக்கு நேரை சொல்லுறதுதானே---?!" – யோசேப்.

"ஓமோம்---நீ வேணுமெண்டா இருந்து நேருக்கு நேரை சொல்லு. வேண்டாமப்பா அந்தத் தலைவலி. பழி ஒரு இடம் பாவம் ஒரு இடம் எண்ட மாதிரி நாங்கள் இஞ்சை இருந்து கொண்டு காசு தரமாட்டமெண்டு சொல்ல---அங்கை ஊரிலை இருக்கிற தாய் தேப்பனுக்கெல்லே விளங்கும். மற்றவங்களை ஊர் விசாரம் சொல்லுறதுக்கெண்டே சிலபேர் இருக்கிறாங்கள்--- ஊர் விசாரங்களை குடுத்தாப்போலை தாங்களெல்லாம் தப்பீடலாம் எண்ட நப்பாசை---"

"அவங்களை மட்டும் பிழை சொல்லாதை. மொத்தத்திலை முக்கால்வாசிப் பேரும் தங்கடை தங்கடை நன்மையளைப் பாத்தால் போதுமெண்டு இருக்கிறவைதான். இண்டைக்கு ஜேர்மனியிலை தமிழாக்களை அனுப்பப் போறாங்களெண்டு கதை அடிபடேக்கை எத்தினை பேர் உணர்வலையெண்டும் ஆர்ப்பாட்டமெண்டும் அந்தரிச்சுக் கொண்டு திரிஞ்சினம். ஆனா இப்ப--- ஒருத்தன்ரை சத்தத்தைக் கூட காணேல்லை. எல்லாரும் மௌனமாயிட்டாங்கள். ஏன்--- எண்பத்தெட்டுக்கு பிந்தி வந்தவைக்கு ஏதோ 'அவ்வெண்த்தால்ற் வெயுக்னிஸம்'... இரண்டு வருசமாம்... கொடுத்திட்டாங்கள். அதாலை தாங்கள் திரும்பிப் போக மாட்டினமாம். அதோடை கனபேருக்கு ரண்டு வருச விசா முடியுறதுக்கிடையிலை எட்டு வருசம் முடிஞ்சு போமாம். பேந்து ஆறாணையும்

அளைக்கேலாது என்ட இருட்டு நம்பிக்கை. இதாலை பாவம் குந்துயிரும் குலையுயிருமாய் உயிரைக் கையிலை பிடிச்சுக் கொண்டு வந்து களைப்பாற்றி அக்கறைப்படுறதுக்கு ஆருமில்லை" என்று உணர்ச்சிவசப்பட்டவனாய் பேசி முடித்தான் யோசேப்.

"அப்ப என்பத்தைந்துக்கு முந்தி வந்தவை பிரச்சனை இல்லாமை வந்தவையெண்டோ சொல்லுறாய்?"

"அப்பிடியில்லை... அப்ப வந்தவைக்கு பாதுகாப்பில்லை எண்டு தெரிந்துதான். ஆனா அவையள் இப்ப வந்தவையைமாதிரி கொலைகளை பக்கத்திலையிருந்து பாக்கேலை. பஞ்சம் பட்டினி நோய் நொடியெண்டு அனுபவிக்கேலை. சுகமாச் சொல்லப் போனா ஒரு நரமாமிசப் பட்சிகளுள்ள நாட்டிலையிருந்து தப்பி வந்தவேன்றை நிலைமைதான் இப்ப"

"இவ்வளவேன்... தமிழ் இயக்கங்களிடையிலை ஒற்றுமை வேணுமெண்டு பலர் ஒப்பாரி வைக்கினம். ஆனா இங்கை அகதியளாய் இருக்கிறவேக்கை கூட வேற்றுமை. 'நல்ல காலம் ஜேர்மனிலை இருக்காமை பரிஸிலை இருக்கிறன்' எண்டு பலபேர் கதைக்கினம். இப்பிடி ஒரு நாட்டிலை இருக்கிறவை மற்ற நாட்டிலை வசிக்கிறவைக்கு ஆதரவாய் குரல் கொடுக்காமை தாங்கள் தப்பீட்டம் எண்ட அறியாமையில் இருப்பதை என்னெண்டுறது?" என்றான் சந்திரன்.

"ஓமோம்... இப்பதான் உனக்கு இப்பிடிக் கதைக்கச் சொல்லுது. அப்ப சுவிஸிலை இருந்து ஆக்களை அனுப்பேக்கையோ... கொஞ்ச நாளைக்கு முந்தி பரிஸ் 'ஏயர் போர்ட்டிலை வந்திறங்கின குழந்தையள் குடும்பங்களையெண்டு வலுக் கட்டாயமாய் பிடிச்சேத்தேக்கை இந்த ஜேர்மனியிலை ஆர் என்ன செய்தவை?"

"சரி சரி. கதைச்சுக் கொண்டிருந்தா காரியம் நடக்காது. அவங்கள் வரப் போறாங்கள் காலைக்கு. நான் இப்ப வெளியிலை போய்ப்போறன். நீங்கள் என்ன செய்யப் போறியள்?" என்று கேட்டான் சுகுமார்.

"நான் வேலை தேடப் போய்ப்போறன். நாளைக்குத்தான் வருவன்" என்றான் யோசேப்.

"ஏன்ரா பேசாம இப்பிடி வெளிக்கிட்டா தேத்தண்ணி ஆர் போடுறது" - இது சந்திரன்.

"இப்ப தேத்தண்ணிதான் இல்லாதது குறை? உனக்குத் தேவையெண்டா போட்டுக் குடியன்..."

"ஓமோம்... போட்டுத் தந்தாமட்டும் குடிக்க வந்திடுவாய்."

"கோவம்மட்டும் மூக்கு நுனியிலை வந்திடுது. எடே சந்திரன்! நாளைக்கு வந்து அண்டா நிறையப் போட்டுத் தாறன். இப்ப அவங்களெல்லே வரப்போறாங்கள்... நீ வெளியிலை போகேலையே..."

அப்போது அறைக்கதவு தட்டப்படும் சத்தம் கேட்டது.

மூவரும் ஒருவரையொருவர் திகைப்புடன் பார்த்தார்கள். சந்திரனின் பார்வை சாமி படத்தின்மேல் பதிந்தது.

சாமி சிரிப்பது போலிருந்தது.

(தொடரும்...)

www.padippakam.com

# சந்தேகம் அது சந்தோசக்கேடு

- இரா. சிவரஞ்சன்

வாழ்க்கை எவ்வளவு உண்மையோ அவ்வளவு உண்மையானது வாழ்க்கைப் பிரச்சனைகளும்தான். பிரச்சனைகள் இல்லாத வாழ்க்கை எந்த மனிதனுக்கும் இல்லை. அப்படியான பிரச்சனைகளை வேறுபடுத்தி அறிந்து அவற்றினைத் தவிர்த்துக் கொள்ளும்போது ஏற்படும் நிம்மதியான வாழ்க்கை ஒரு அமைதியை ஏற்படுத்துகின்றது.

வாழ்க்கையில் பல காரணங்களினால் கவலைகளும் துன்பங்களும் ஏற்படுகின்றன. அதன்மூலம்தான் சோர்வுகளும் வீணான வெறுப்புணர்வுகளும் பெரும் துன்பச் சுமைகளும் ஏற்படுகின்றன. இப்படியான துன்பநிலைக்கு ஒரு காரணமாக மிகவும் முக்கியமானதாக அமைவது 'சந்தேகம்' என்ற மனநோய்.

சந்தேகம், மனிதனுடைய பலவீனங்களில் மிகவும் வலுவடைந்துள்ளது எனலாம். ஒருவனுடைய மனமானது நிலையில்லாமல் நிதானமில்லாமல் தளர்ந்து போகும் போது பலவீனங்கள் ஏற்படுகின்றன. வீணான குழப்பங்களும் வேதனைகளும் கற்பனைகளும் கனவுகளும் வளர்கின்றன. இவை வளர்ந்து கொண்டே போகும்போது ஏற்படுகின்ற மனக்குறைதான் சந்தேகம் என்ற பலவீனமாகும்.

மானிட வாழ்வில் குடும்பங்களுக்கிடையே சந்தேகம் வளரலாம்; சமுதாயங்களுக்கிடையே சந்தேகம் வளரலாம்; உறவு முறைகளுக்கிடையே சந்தேகம் வளரலாம்; பாடசாலைகளிலோ சரி கல்லூரிகளிலோ சரி சந்தேகம் வளரலாம்; காதல் என்ற மனநோய் வளரும்போதும் ஏற்படும் பலவீனமும் சந்தேகம்தான்; சகோதரர்களிடம் ஏற்படும் தாழ்வு மனப்பான்மை மூலம் சந்தேகம் ஏற்படும்.

சந்தேகம் என்ற மனவியாதி எப்படியான உருவங்களில் ஏற்படுகின்றது, அதனை எப்படி எமது சந்தோசமான வாழ்வில் இருந்து அகற்ற முடியும். அதற்கான வழிமுறைகள் என்ன என்பதையும் ஆராய்ந்து எமது வாழ்க்கை வளம் பெறப் பலவீனங்களை இல்லாமல் செய்து வாழ்வோம். பிறரையும் நிம்மதியாக வாழ வழி வகுப்போம்.

'குடும்பம் ஒரு கோயில்' என்பார்கள். அதில் உள்ள அனைத்து அங்கத்தவர்களும் ஒருவரையொருவர் புரிந்து கொண்டு அவர்களுக்கிடை

யே எவ்விதமான வித்தியாசங்களோ வேறுபாடுகளோ இல்லாமல் எல்லோரும் தத்தமது கடமைகளை சுயகட்டுப்பாடுகளுடன் செய்யும்போது அவர்களுக்கிடையே எந்தவிதமான போட்டியோ பொறாமையோ ஏற்படச் சந்தர்ப்பமே கிடையாது. இப்படி வாழும்போது தாழ்வு மனப்பான்மை இல்லாமல் ஒருவரையொருவர் புரிந்துகொண்டு வாழ்வார்கள். அந்த நிலையில் அந்தக் குடும்பம் தூய்மையான கோயிலாகும்.

அதைவிடுத்து கணவன் மனைவிக்கிடையில் சிறிய மனக்கசப்புகளை விரிவுபடுத்துவது கூடாது. சிறிய மனக்கசப்பு வளர்ந்து சிந்திக்கும் அறிவை பலவீனமாக்குகிறது. அதனால் மனைவி செய்யும் எந்தவிதமான செயல்களும் கணவனுக்குச் சந்தேகத்தினையே உண்டுபண்ணுகின்றது. சந்தேகம் வளர வளர கணவன் மனைவியின் உறவுகள் விரிவாகிப் பிரிவாகின்றது. பிரிவு என்பது வாழ்க்கையில் தாங்கொணாத் துன்பமாகும். கணவனும் மனைவியும் ஒருவரையொருவர் புரிந்துகொண்டு வாழும்போது சந்தேகம் என்ற நோய் பரவ எந்தச் சந்தர்ப்பமும் இல்லை. வீணான சந்தேகங்களை ஏற்படுத்துவதிலும் பார்க்க எதையும் விட்டுக் கொடுத்து நடப்பதன் மூலம் வாழ்வில் கணவன் மனைவியிடையே பரஸ்பர அன்பு வளர்ந்து குடும்ப முன்னேற்றத்திற்கு வழியமைக்கலாம்.

பெற்றோர்கள் ஒருபோதும் பிள்ளைகளிடையே பாரபட்சம் காட்டாமல் எல்லாப் பிள்ளைகளையும் தங்கள் பிள்ளைகள் என்ற ஒரே நோக்கத்துடனும் ஒரே கண்ணோட்டத்துடனும் பார்க்க வேண்டியது அவசியம். மூத்த பிள்ளை என்றோ இளைய பிள்ளை என்றோ வித்தியாசம் காட்டக் கூடாது. அதுவே சிறுபிள்ளைகளிடையே தாழ்வு மனப்பான்மை என்ற பலவீனம் உருவாகச் சந்தர்ப்பமாகின்றது.

இதுவே துன்பமாக மனோவியாதியாக உருவாக்கப்பட்டு சந்தேகம் வளர்க்கப்படுகிறது. சந்தேகமுடைய பிள்ளை தாய்க்கோ தந்தைக்கோ மதிப்புக் கொடுக்கத் தவறுகிறான். அப்படித் தவறும்போது தங்களை எதிர்த்துப் பேசுகிறான் என்றோ அல்லது மதிக்கிறான் இல்லை என்றோ பெற்றோர் வருந்துவதிலோ கோபப்படுவதிலோ எவ்வித பிரயோசனமும் இல்லை. பெற்றோர் அவனுக்கு மதிப்புக் கொடுத்திருந்தால் அவனும் பிள்ளைதானே என்று பாரபட்சமின்றி வளர்த்திருந்தால் அந்த பிஞ்சு மனதில் சந்தேகம் என்ற வியாதி பரவியிருக்குமா?!

ஒருவனை ஒருத்தி காதலிக்கிறாள். சாதி, மதம், இனம், பணம் என்பன எல்லாம் வெறும் தூசி என்று சொல்லப்படுவது காதல் என்ற அகராதியில்தான். இங்கு இருவரின் இதயங்கள்... மனங்கள்தான் வாழ்க்கைப் பாடங்களைப் படிக்கின்றன; புறத்தே பேசுகின்றன. இப்படியான சமயங்களில் ஒருவரையொருவர் புரிந்து கொள்கிறார்கள். அன்பு, பாசத்துடன் நேசிக்கிறார்கள். இருமனங்களும் ஒன்று சேர்கின்றன. இதற்குப் பெயர்தான் புனிதமான காதல் என்று இலக்கியம் கூறுகிறது.

www.padippakam.com

உண்மைதான். காதல் என்பது புனிதமானது. அன்பானது. பாசத்தினை வானது. நேசிக்கப்படுகின்றது. காதல் சாதியையோ, பணத்தையோ, மதத்தினையோ, இனத்தினையோ பார்ப்பதில்லை. இதயத்திலுள்ள உண்மையான அன்பையே ஆழமான பாசத்தையே ஆதாரமாகக் கொண்டது. இந்த வேளையில் காதலனுடன் வேறொரு பெண்ணோ சரி, காதலியுடன் வேறொரு ஆணோ சரி சாதாரணமாகப் பழகும்போது சந்தேகம் ஏற்படுகிறது. இதனால் உருவாகும் தாங்கொணாத் துயரங்கள் ஏராளம்.

சந்தேகம் வளர்ந்துவிட்ட பிறகு எப்படித்தான் சாதாரணமாகப் பழக்கம் ஏற்பட்டாலும் மனதில் உருவான வடு மாறப் போவதில்லை. இப்படியான நிலைமையில் இருவருக்கிடையேயும் மனக் கசப்புகள் பெருகியவண்ணமே மனக் கசப்புகள் பெருகும்போது பிரிவுகள் ஏற்படும். இருமனங்கள் ஒன்றையொன்று நேசித்த பிறகு பிரிவு என்ற ஒன்று வரும்போது அதனை, அந்த இழப்பை ஈடுசெய்ய முடியாது. உண்மையும் அதுதான்.

காதலனோ சரி காதலியோ சரி எப்போதும் சந்தேகம் என்ற மனோவியாதி ஏற்படுவதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். அதனால் ஏற்படுவது தாங்கொணாத் துன்பமும் இறுதியில் மரணமும்தான். காதலனை புரிந்து கொள்ள வேண்டியது காதலியின் நிலைமை. காதலியைப் புரிந்து கொள்ள வேண்டியது காதலனின் நிலைமை. காதலனும் காதலியும் ஒருவரையொருவர் ஆழமாகப் புரிந்து கொண்டு நேசிக்கும்போது வேறு யாருடன் எப்படித்தான் பழகினாலும் எவ்விதமான சந்தேகமும் ஏற்படாது.

இதேபோல்தான் பாடசாலையில் படிக்கும்போதும் உண்மையான ஆழமான அன்பினால் நட்புக் கொள்ளும்போது நண்பனும் சரி நண்பியும் சரி உண்மையாக மனதாலே தூய்மையாகப் பழகுவார்கள். மனதில் வஞ்சகங்களும் சரி பொறாமைகளும் சரி நிலை கொண்டு வாழும்போது நண்பர்களிடையேயும் சந்தேகம் வளரும். அதைத் தவிர்க்கும்போது பாடசாலை நாட்களும் உண்மையான வாழ்வின் நாட்களாக மலரும்.

வாழ்க்கையில் எத்தனையோ மனிதர்களுடன் பழகுகிறோம். சந்தோசமாக வாழ்கிறோம்; வாழவும் நினைக்கிறோம். வாழ்க்கை என்னும் பள்ளியிலே எத்தனையோ உண்மையான யதார்த்தமான உலக அனுபவங்களைப் படிக்கின்றோம். சமுதாயங்களிலே கலாச்சாரங்களை வழி கொண்டு வாழ்க்கைப் பயணத்தை மேற்கொள்கின்றோம். சமுதாயங்களை ஒரு நேரான வழிக்குக் கொண்டு வரவே உருவாக்கப்பட்ட கலாச்சாரங்களையும் மதங்களையும் பின்பற்றுகின்றோம்; செயற்படுகின்றோம்.

சமுதாயமானது ஒரு மனிதனை நல்லவனென்றும் புகழும்; அதே சமுதாயமே அம்மனிதனைச் சந்தர்ப்பம் கிடைக்கும்போது கெட்டவன் என்றும் சொல்லும். எல்லாவற்றிற்கும் மனம்தான் காரணம். சமுதாயத்தின் கண்ணோட்டம் நல்ல வழியில் நோக்கும்போது அவன் நல்லவனாகவும் தீயவழியில் நோக்கும்போது கெட்டவனாகவும் தெரிகின்றான்.

www.padippakam.com

ஒரு மனிதன் ஒரு பெண்ணுடன் பழகும்போது அவனை நல்வழியில் நோக்கும் சமுதாயம், அவன் அந்தப் பெண்ணை . . . சகோதரியாக நினைக்கும் நல்லவன் என்கிறது. அதே சமுதாயத்தின் கெட்ட பார்வையில் அவன் அவளைக் காதலிப்பதாகத் தெரிகிறது. ஆனால் அவன் நல்வழியில் பழகினாலும் சமுதாயத்தின் சந்தேகக் கண்ணோட்டம் அவனைக் கெட்டவனாக மாற்றுகின்றது; அவனைத் தீயன செய்யத் தூண்டவோ, அந்தப் பெண்ணிடம் காதலை ஏற்படுத்தவோ வழிவகுக்கின்றது. அதுவே குடும்பப் பிரிவுக்கு ஆளாகின்றது. எனவே சமுதாயத்தின் பார்வை அவ்விரு குடும்பங்கள், வாழ்க்கையில் எதிரியாக வழி வகுக்கிறது.

எனவே, பகுத்தறிவு கொண்ட மானிட வாழ்வில் பலவீனமான, மனோவியாதியான சந்தேகத்தினை சமுதாயம், உறவுகள், குடும்பங்கள், மாணவர்கள், நண்பர்கள், காதலர்கள் இப்படிப் பல வாழ்க்கைப் பாத்திரங்களுக்குமே பசுமை வாழ்க்கையிலுள்ள சந்தோசங்களுக்குக் கேடு விளைவிக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டியது அவசியம். ஒவ்வொரு இதயங்களும் ஒன்றையொன்று புரிந்து கொண்டு நல்ல உண்மையான நம்பிக்கையுடன் வாழ ஆண்டவன் கருணை காட்டட்டும்.

"சந்தேகம் என்பது வாழ்க்கையில் மனிதனால் ஏற்படும் ஒரு பக்கச் சார்பான கண்ணோட்டத்தினால் உருவாக்கப்பட்ட மனோவியாதியே, அதனை ஒட்டுமொத்தமாக அழிப்பதற்கு மனிதனால் உருவாக்கப்பட வேண்டிய ஆயுதம் வைராக்கியமும், நம்பிக்கையும்தான்."

## கேள்வி? பதில்!

அடுத்த அலையில் இருந்து....!

வாசகர்கள் கேட்கும் கேள்விகளுக்கு 'திருவாளர் புத்திஜீவி' பதிலளிக்கிறார்.

கேள்விகள் எதுவாக, எவ்வளவாக இருந்தாலும் எழுதி அனுப்புங்கள்.

www.padippakam.com

# அதிமேதாவியின் அவசரக்குறிப்புகள்

- (இ)ராமசாமி -

எனது நண்பருக்கு தென்னிந்தியாவிலிருந்து, போனவாரம் கடிதமொன்று வந்திருந்தது. அனுப்பியவர் நண்பரின் சகோதரி. மூன்று தடவைகள் தங்களது பெயர்களைப் பதிவு செய்ய அகதிகள் அலுவலகத்துக்குப் போனதாகவும், அங்கிருந்த அதிகாரிகள், "உங்களை அந்தமானுக்கு அனுப்பப் போகின்றோம்" எனச் சொன்னதால் மிகவும் கலக்கமுற்றிருப்பதாகவும் அந்தக் கடிதத்தில் எழுதப்பட்டுள்ளதாக நண்பர் கூறினார். எனது உறவினர்களும் இந்தியாவில் இருப்பதால் இந்தச் செய்தி கேட்டு ஓர் அவசரத் தாவலில் தொலைபேசியின் தொடர்பு கொள்ள, 'சும்மா ஒரு வெருட்டலுக்குத்தான் இப்படி அதிகாரிகள் சொல்லுகின்றார்கள்' என இளைய சகோதரன் கூற, எனக்குள்ளோ ஒருவகைச் சமாளிப்புகள்.

உண்மைகள் எப்படியிருந்தாலும், இலங்கைத் தமிழர்களின் இன்றைய நிலை மிகவும் கேள்விக்குறியான ஒன்றுதான். வாழ்கின்ற இடம் இலங்கையானாலென்ன, இந்தியாவானாலென்ன, மேற்குலகங்களானாலென்ன, அடுத்து என்ன நிகழும் என நிச்சயப்படுத்த முடியாத கானல் இருப்புக்கள்.

இலங்கையில் எஞ்சி இருப்பவர்களின் உயிர்களை, அங்கே களத்தில் நிற்பவர்களும் பாதுகாக்கும் எண்ணத்துடன் செயற்படுவதாகத் தெரியவில்லை. ஏனென்றால் அவர்கள் அடுத்த சந்ததிக்காகப் போராடுகிறார்களாம்.

அனைத்தையும் இழந்து உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு ஆழ்கடலின் மேலே அலைக்கழிந்து வந்து தென்னிந்தியக் கரையோரங்களில் அகதிகளாக்கப்பட்ட மக்களும் எவ்வளவோ இன்னல்களுக்கு மத்தியில் தான் நாட்களைத் தொலைத்தார்கள். ஆனால் எங்கள் உடன்பிறப்புகளின் கொலைக் கலாச்சார விஸ்தரிப்புகளால் அந்தத் தொலைப்புகளிலும் சில மறுப்புகள். ஒரு கதைக்காகவேனும் அவர்களை அந்தமானுக்கு அனுப்பி அடிமைகளாக நடத்தினாலும் கூட; என்ன, அதிசயமா நடந்துவி



படிப்பகம்

டப் போகிறது.

'இருக்குமிடத்தில் இருந்து கொண்டால் எல்லாம் சௌக்கியமே' என்பதால் இங்கே இருப்பவர்கள் பலவிதமான அபிப்பிராயங்களைச் சொல்லலாம். ஆனால் இந்த அபிப்பிராயங்கள் எங்கள் தனித்துவங்களை வெளிப்படுத்துவதற்கான சந்தர்ப்பங்கள் மாத்திரமே!

மேற்கைரோப்பிய நாடுகளிலும் நிறங்களுக்கு மதிப்பளிக்கப்படாத விசாக் கெடுபிடிகள். அவலங்களுக்கு வாழ்க்கைப்பட்டு அல்லல்பட்டோர் 83 ஆம் ஆண்டுக்குப் பின்பு வந்தவர்களே! ஆனால் அவர்கள்தான் இங்கே புதிய சட்டங்களின் நேரடிப் பாதிப்புகளுக்கு இலக்காகிப் போனவர்கள்.

"தமிழன் என்று சொல்லடா. தலை நிமிர்ந்து நில்லடா" என்பதாலும், "ஆண்ட பரம்பரை மீண்டும் ஒருமுறை ஆள நினைப்பதில் என்ன தவறு" என்ற எங்கள் தந்தைக் கோஷ்டிகளின் தவறான கோஷங்களாலும், மக்களிலிருந்து அந்நியப்பட்டு எழுந்த ஆயுதங்கள் எம்மை நாடோடிகளாக மாற்றிய நிலைமைகளைப் பார்த்தீர்களா? சும்மாவேனும் விடுதலைப் போராட்டத்தில் இழப்புகள், அழிவுகள் தவிர்க்க முடியாதவை என்ற வார்த்தை ஜாலங்களை இனிவரும் காலங்களில் மறந்துவிடுவோம். ஆனால் எங்கள் மூதாதையர்கள் யாரைத்தான் முன்பு ஆண்டார்கள் என்பதைமட்டும் முதலில் தெரிந்து கொள்வோம்.

■ ■ ■ ■

கோர்பசேவ் சுகவீனமுற்றுள்ளார் அல்லது விடுமுறையில் போய்விட்டார்.... இன்னும் எப்படியெல்லாமோ செய்திகள் வந்தவண்ணமே இருக்கின்றன.

இப்போது சோவியத் யூனியனில் இராணுவ ஆட்சியென்றும், K.G.B யும் பொலிட் பீரோவில் உள்ளவர்களும் கோர்பசேவை எங்கேயோ அடைத்து வைத்துவிட்டு நாடகமாடுகிறார்கள் என்றும் இந்த அமெரிக்க, ஐரோப்பிய செய்தி நிறுவனங்கள் தொடர்ச்சியாகச் சத்தம் போட்டுக் கொண்டிருக்கின்றன.

விடுமுறையை ரத்துச் செய்த ஜோர்ஜ் புஷ் உம் இன்னும் பல தனிப் பெருந் தலைவர்களும் கவலை தெரிவித்தவண்ணம் இருக்கின்றார்கள். உலக அகராதியில் தனிப்பெருந் தலைவர்கள் என்றால் பெயர் போன கொலைகாரர்கள், கொள்ளைக்காரர்கள் என்றிருப்பது வேறுவிடயம்.

www.padippakam.com

உலக சமாதானத்துக்கு ஆபத்து வந்துவிட்டதென்றும், மறைத்து வைக்கப்பட்டுள்ள கோர்பசேவை விடுதலை செய்து ரஷ்ய அதிபராக மீண்டும் பதவியில் அமர்த்த வேண்டும் எனவும் கோரிக்கை தொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். பேரப் பாண்டவரும் தமது பங்கிற்கு,'... சோவியத்தில் ஜனநாயகம் தழைத்தோங்க வேண்டும். கோர்பி நலமுடன் திரும்பி வரவேண்டும்' என்பதையும் சேர்த்த வழமையான ஓதுதலில். இன்றும் கூடுதலாக அமெரிக்கச் சார்பு நிலையிலுள்ள ஜெல்சின் ஹர்த்தால், கதவடைப்பு போன்ற போராட்டங்களில்.

மொத்தத்தில், கோர்பசேவ் காணாமற் போனது சிலருக்கு ஆபத்தாய்ப் போய்விட்டது.

கோர்பியின் பதவியேற்பும்; சொல்லிலா, செயலிலா எனத் தீர்மானிக்க முடியாத மறுசீரமைப்புகளும் உலகின் பார்வையைப் பல தடவைகள் சோவியத்தின் பக்கம் திருப்பியது என்பது ஏதோ உண்மைதான். சோவியத் யூனியனை விழுங்குவதற்குத் தயாராக இருந்த முதலாளித்துவ நாடுகளெல்லாம், கோர்பிக்கு ஆதரவளித்து டொலர்களாகவும், மார்க்குகளாகவும் கொட்டிக் கொடுத்து, மதில்களைத் தகர்த்து, வார்சோ அமைப்பை உடைத்து---- எவ்வளவோ சாதகங்களைப் பெற்றுக் கொண்டன. உலக சமாதானத்துக்கான நோபல் பரிசைக் கூட கொடுத்தார்கள். ஈராக்கில் இலட்சக்கணக்கான மக்கள் படுகொலை செய்யப்படும்போது மொஸ்கோவில் இருந்து கொண்டு சமாதானத் தூது விடுகின்ற அளவிற்கு இந்த முதலாளித்துவத்திடம் கோர்பி விலை போனதை யாவரும் அறிந்திருக்கக் கூடும்.

"ஒய்யாரக் கொண்டையாம் தாழம்பூவாம். உள்ளே இருக்குதாம் ஈரும் பேனும்" என்ற மொழியோடு இணைந்து நிற்கும் அமெரிக்கா உலகுக்குத் தலைமை தாங்கும் அறைகூவல்களை விடுகின்ற அளவிற்கு சோவியத் யூனியனில் பல தவறுகள்.

ஒருங்கமைக்கப்பட்ட சோவியத் யூனியன் நீண்ட ஆயுளைப் பெறுவதற்காக உழைத்த ஸ்டாலினின் சிலைகள் உடைக்கப்பட்டன. அவரை கிட்லரோடு ஒப்பிட்டு இந்த மேற்குலகங்களும் குளிர்காய்ந்து கொண்டன. மார்க்ஸ் உம் எங்கல்ஸ் உம் உலகுக்குத் தந்த சமூக விஞ்ஞானமும் பயங்கரவாதமாக்கப்பட்டது. ஆனால் சோவியத்தில் எழுந்த தேசிய இனப் பிரச்சனைகளெல்லாம்

பீரங்கிகளால் நசுக்கப்பட்டன. கிளாஸ் நோட்ஸ், பிறஸ்ரோய்க்கா போன்ற நவ உதிர்ப்புகளால் கிழக்கைரோப்பிய மக்கள் முன்பு தொலைத்தவற்றைத் தேட முயற்சித்திருக்கலாம். ஆனால் முதலாளித்துவத்தின் ஆரம்பமே இப்படியா ஒரு கோர முகத்தைக் காட்டியிருக்க வேண்டும். இல்லாவிட்டால், சோவியத் யூனியனில் பட்டினி என்று இந்த மேற்குலகங்கள் போட்டி போட்டு அள்ளிக் கொடுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்குமா ?

தத்துவங்களை நடைமுறைப்படுத்துவோரின் துரோகத்தனங்களால் மார்க்ஸ் உம் எங்கெல்ஸ் உம் எப்போதோ அந்நியப்பட்டவர்கள். இந்த இடத்தில், நமது நாட்டவர்கள் இவற்றையெல்லாம் தூக்கி வைத்துக் கொண்டு அரோகரா பாடுவதை எந்த வகையில் சேர்ப்பது என எனக்கு தெரியவில்லை.

கோர்பியின் மறைவு ( இறப்பு அல்ல ), அதை எதிர்த்து சோவியத் மக்களின் ஆர்ப்பாட்டம். இதற்குத் தலைமை தாங்கும் ஜெல்சின் போன்ற அமெரிக்க எடுபிடிகள். பல இடங்களில் மக்களோடு நிற்பதாகக் காட்டப்படும் சிவப்பு இராணுவம் ; இறுதியில் இன்னுமொரு உலக சண்டியன் உறக்கம் கலைந்து மிக மெதுவாகச் சோம்பல் முறிக்கக்கூடும் என்றுதான் நானும் எதிர்பார்த்திருந்தேன்.

ஆனால், திங்களில் காணாமல் போன கோர்பி வியாழனில் தோன்றினார். K.G.B உட்பட பல தலைமைகள் மாற்றப்பட்டு, ஜெல்சின் போன்றோர் ஜோர்ஜ் புஸ்ஸுக்கு நன்றி சொல்லி, பிரஸ்ரோய்க்காவுக்கு கிடைத்த வெற்றி என்று மேற்குலகங்கள் ஒத்துப் பாட, சோவியத்தில் ஜனநாயகம் தழைத்திருப்பதாக எல்லோரும் சொல்கிறார்கள். ஆனால், இந்த நாடகங்கள் ஏன்தானோ ?

வெளிநாட்டு அமைச்சர் உட்பட பலர் இராஜினாமா செய்துவிட்டார்கள். ஜெல்சினின் செல்வாக்கு இன்னும் கூடுதலாகப் பதிகிறது. கம்யூனிஸ் கட்சி, அதன் உத்தியோக பூர்வ ஏடான பிராவ்தா போன்றவை தடை செய்யப்படுகின்றன. சிலைகளும் நகர்த்தப்படுகின்றன. குடியரசுகளும் விடுவிக்கப்படுகின்றன. நாளை கோர்பியும் நகர்த்தப்பட்டு ஜெல்சின் அமர்ந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

■ ■ ■ ■

(35ம் பக்கம் பார்க்க...)

www.padippakam.com

# குழந்தை பிறந்தவுடன்...

- மீந்திரா

மருத்துவ விடுதியிலிருந்து வரும்போது டாக்டர் சொன்னவற்றைக் குறித்து வைத்துக் கொண்டு, அதன்படி குழந்தையைப் பார்த்துக் கொண்ட பிறகும் ஏதாவது பிரச்சனை ஏற்பட்டால், அந்தப் பிரச்சனைகளைக் கவனமாகக் குறித்து வைத்துக் கொண்டு மீண்டும் டாக்டரிடம் போக வேண்டும்.

குழந்தைகள் பால் குடிக்க மறுத்தாலும், பால் கொடுக்கும்போது தாய்க்கு ஏதாவது துன்பம் ஏற்பட்டாலும், எல்லாவற்றையும் தெளிவாகக் குறித்து வைத்துக் கொண்டு டாக்டரிடம் சொல்ல வேண்டும். பிறகு, அவர் கூறும் யோசனைகளையும் சொல்ல வேண்டும்.

குறிப்பிட்ட நேரப்படிதான் குழந்தைக்குப் பால் தர வேண்டும் என்ற அட்டவணை தயாரித்து வைத்துக் கொண்டு பால் கொடுப்பது குழந்தைக்கு ஏற்றதல்ல. குழந்தை பசியால் தொடர்ந்து அழுதால் கூட, பால் கொடுக்கும் நேரம் ஆகவில்லையே என்று தாய் குழந்தைக்குப் பால் கொடுக்காமல் இருப்பது தவறு. ஆகையால், ஒரு நாளைக்கு எத்தனை தடவை பால் கொடுக்க வேண்டும் என்று டாக்டரைக் கேட்டு அட்டவணை தயாரித்து வைத்திருந்தாலும் கூட, குறிப்பிட்ட நேரத்துக்கு முன்னாலேயே குழந்தை பசியுடன் அழுதால் பசிக்கும்போது பால் கொடுப்பதுதான் நல்லது. குழந்தைக்கு எது எப்போது தேவை என்பதைத் தாய் தனது அறிவினால் முடிவு செய்து, அதன்படி நடக்க வேண்டும்.

குழந்தைக்குப் பசிக்கும் போது, தூக்கத்திலிருந்து விழித்துக் கொண்டு அழுவதுடன், கை முட்டிகளை வாயருகில் கொண்டு செல்லும். அப்போது பால் கொடுக்கத் தவறக் கூடாது. குறிப்பிட்ட நேரத்துக்கு முன்பு குழந்தை விழித்துக் கொண்டால், அவ்வளவாகப் பால் பருகாவிட்டாலும் கொஞ்சமாகப் பால் பருகும். அதற்கு எவ்வளவு தேவையோ, அவ்வளவு பால் கொடுத்தால் போதும். குழந்தை பசிக்கும் போது என்ன செய்யும், வலிக்கும் போது என்ன செய்யும் என்பதைத் தாய் உன்னிப்பாகக் கவனிக்க வேண்டும். அதன்படி நிவாரணம் தேட வேண்டும்.

தாய்ப்பால் குழந்தைக்குப் போதிய அளவு கிடைக்காதபோது, தாய்ப்பால் கொடுத்த பின் உடனே புட்டிப் பாலையோ, குழந்தைகளுக்கான தேநீரையோ குழந்தைகளுக்குக் கொடுக்கலாம். இதற்காகக் குழந்தை அழும்போதெல்லாம் பசி அடங்க வெறும் தண்ணீரை அதாவது தேநீரை அடிக்கடி கொடுக்கக் கூடாது.



படிப்பகம்

www.padippakam.com

குழந்தைக்குத் தாய்ப்பால் மிகுதியாகக் கிடைக்கத் தாய் உணவு வகையில் சில மாற்றங்களைச் செய்து கொள்ள வேண்டும். குழந்தைக்குப் பால் கொடுக்கும் நாட்கள் வரையில் இந்தப் பழக்கத்தைக் கைவிடக் கூடாது. குழந்தைக்குப் பால் கொடுக்கும் பெண்கள் கொஞ்சம் மிகுதியாகவே பசுப்பால் பருக வேண்டும். சாப்பாட்டையும் கொஞ்சம் மிகுதியாகவே சாப்பிட வேண்டும். பொதுவாகச் சாப்பிடுவதை விடக் கால் பங்கு உணவை மேலதிகமாகச் சாப்பிட வேண்டும். பாலையும், உணவையும் இப்படி அதிகமாகச் சாப்பிடுவதால், குழந்தைக்கு நல்ல சத்துக் கிடைக்கும். குழந்தை மிக ஆரோக்கியமாக வளரும். பாலிலிருந்து குழந்தையின் எலும்பு, பற்கள் இவற்றின் வளர்ச்சிக்காகக் கால்சியம் சத்து கிடைக்கிறது.

வெறும் பாலையே பருக விரும்பாத பெண்கள், கொக்கோ அல்லது சொக்லேட் கலந்த பாலைப் பருகலாம். பாலைத் தவிர, தினமும் முடிந்த அளவுக்கு நிறையத் தண்ணீரும் பழரசமும் பருக வேண்டும். பருப்பு வகைகள், உருளைக் கிழங்கு, பச்சைக் காய்கறிகள் ஆகியவற்றைப் பகலில் நிறையச் சாப்பிடலாம். இரவில்மட்டும் கொஞ்சம் குறைவாகச் சாப்பிட வேண்டும். சாப்பிட்டதும் பழங்களைச் சாப்பிட வேண்டும்.

தாய்க்கு மிகுதியாகப் பால் சுரப்பதற்கும், மனநிலைக்கும் மிக நெருங்கிய தொடர்பு உண்டு. மனத்தில் எந்தவிதமான துன்பச் சுமையும் இருக்கக் கூடாது. மிக அதிகமாக ஓய்வு வேண்டும். ஆகையால் முடிந்த அளவுக்குத் தாய் ஓய்வு பெற வேண்டும். மனதில் உற்சாகம் ஏற்பட்டு அமைதியான ஒரு நிலையிருந்தால் பெண்களுக்கு நிறையப் பால் சுரக்கும். ஒரு நாளைக்கு ஒன்பது மணி நேரமாவது தூங்க வேண்டும். தொடர்ந்து தூங்க வேண்டும் என்பதில்லை. குழந்தை தூங்கும்போது தாயும் தூங்கலாம்.

தாய் ஆத்திரம் கொள்ளுவதோ, மற்றவர்களுடன் எதைப்பற்றியாவது தீவிரமாக விவாதிப்பதோ, எதையாவது நினைத்துக் கொண்டு ஆவலை வரவழைத்துக் கொள்வதோ கூடாது. இதனால்தான், குழந்தை பிறந்ததும் ஒன்றிரண்டு மாதங்கள்வரையில் யாரும் உறவினர்கள் வராமல் இருப்பது கூட நல்லது. அப்படியே யாராவது வந்துவிட்டால் கொஞ்சமாகப் பேசி அனுப்பிவிட வேண்டும்.

குழந்தைக்குப் போத்தல் பால் தரும்போது, குழந்தைக்கு நோய்க் கிருமிகளால் ஆபத்து ஏற்படாமல் இருக்கச் சில எளிய வழிகளைக் கடைப்பிடிக்க வேண்டும். புட்டியில் உள்ள பாலைக் குழந்தை குடித்து முடிந்ததும், புட்டியைக் குளிர்ந்த நீரில் நன்றாகக் கழுவிவிட்டு, புட்டி நிறையத் தண்ணீரை நிரப்பி வைக்க வேண்டும். பிறகு புட்டியில் ஒட்டியிருக்கும் பாலைக் கழுவிக் கொள்ள இந்த வழி சுலபமானதாக இருக்கும்.



படிப்பகம்

www.padippakam.com

புட்டியில் பொருத்தப்பட்டிருக்கும் இரப்பரையும் உடனே கழுவ வேண்டும். இல்லாவிட்டால் பாலில் உள்ள வெண்ணெய்ச் சத்து இரப்பரைக் கெடுத்துவிடும். சிறிதளவு உப்புத் தூளை இரப்பரின் உள்ளே போட்டு விட்டு, உள்ளங்கைகளுக்கு மத்தியில் இரப்பரை வைத்து அழுத்தித் தேய்த்து, பின்பு நன்றாகக் கழுவி விட வேண்டும்.

மிகச் சிறிய குழந்தைகள் அழும்போது, காற்றையும் விழுங்கிவிடுகின்றன. வயிற்றுக்குள் போய்விடும் இந்தக் காற்று குழந்தைக்குத் தொல்லை கொடுக்கும். வயிற்றில் உணவு செல்ல அதற்கு இடமில்லாமல் போய்விடும். வயிற்றில் காற்று உள்ளவரை துன்பமாக இருக்கும். ஆகையால், இப்படிப்பட்ட நேரங்களில் குழந்தை பால் குடித்ததும், குடித்த பால் அப்படியே மேலே வந்துவிடும். வயிற்றில் காற்று உள்ளவரையில் குழந்தைக்குத் தூக்கமும் வராது. ஆகையால் வயிற்றில் புகுந்து கொண்டு தொல்லை கொடுக்கும் இந்தக் காற்றை வெளியே எடுக்க வேண்டும். இது மிக எளிது.

குழந்தையை மடிமேல் உட்கார வைத்துக் கொண்டு மிகக் கவனமாகக் குழந்தையின் தலையை ஒரு கையால் பிடித்துக் கொள்ள வேண்டும். அதே கையின் மணிக்கட்டால் குழந்தையின் முதுகில் தாங்கிக் கொண்டு மற்றொரு கையால் குழந்தையை வாய்ப்பாகப் பிடித்துக் கொண்டு, இலேசாக, குழந்தையை முன்னும் பின்னும் பல தடவை ஆட்ட வேண்டும். இப்படி ஆட்டினால், வயிற்றில் உள்ள காற்று வெளியே வந்துவிடும்.

சில குழந்தைகள் பால் குடிக்கும்போது வயிற்றில் நீர்க் குமிழிகள் சேர்ந்துவிட்டால் திணறும். அப்போது குழந்தை பால் குடிப்பதை நிறுத்திவிடும். உடனே குழந்தையின் வயிற்றில் உள்ள காற்றை எடுக்க வேண்டும்.

பொதுவாக, பால் பருகுவதற்கு முன்பும், பால் பருகிய பின்பும் வயிற்றில் உள்ள காற்றை எடுப்பது நல்லது. இதை வழக்கமாக்கிக் கொள்வது மிகவும் நல்லது. காற்றெடுப்பதை முரட்டுத்தனமாகச் செய்யக் கூடாது.

குழந்தை விரைவாகப் பாலைக் குடிப்பதால் விக்கல் வரும். அல்லது மிகுதியாகப் பாலைப் பருகினாலும் விக்கல் வரும். அப்படி விக்கல் வந்தால், இது கொஞ்ச நேரத்தில் சரியாகிவிடும். இதைப் பற்றித் துன்பம் கொள்ள வேண்டாம். தேவையானால் வயிற்றிலுள்ள காற்றை எடுக்க முயற்சி செய்து பார்க்கலாம். வேறு ஒன்றும் செய்ய வேண்டாம். வயிறு பருப்பதற்காகவும் விக்கல் எடுப்பதுண்டு. தொடர்ந்து விக்கல் எடுத்துக் கொண்டே இருந்தால்மட்டும் டாக்டரிடம் காட்டலாம்.


படிப்பகம்

சில குழந்தைகள் பாலைக் குடித்ததும் கொஞ்சம் கொஞ்சமாகப் பாலை உமிழும். குழந்தை உட்கார முயற்சி செய்யும்போது இப்படி உமிழ்வது இயற்கை. வாயில் உள்ள பால் தவறி வெளியே வருவது இது. இதைப்பற்றிக் கொஞ்சமும் கவலைப்பட வேண்டாம். கொஞ்சம் குறைவாக வேண்டுமானால் பால் கொடுக்கலாம்.

தூக்கத் தெரியாமல் குழந்தையைத் தூக்குகிறவர்கள், வயிற்றில் அமுக்கிவிடுவதாலும் பால் வாயிலிருந்து இப்படி வெளியே வரும். இது இயற்கையே.

ஆனால் வாந்தி எடுப்பது என்பது வேறு. சில குழந்தைகள் வாந்தி எடுக்கத் தொடங்கினால், தொடர்ந்து வாந்தி எடுக்கும். ஒவ்வொரு தடவையும் பால் கொடுத்ததும் உடனே வாந்தி எடுக்கும். இப்படி இரண்டு மூன்று தடவைக்கு மேல் குழந்தை பால் குடித்ததும் வாந்தி எடுத்தால், டாக்டரிடம் குழந்தையைக் காட்ட வேண்டும்.

குழந்தை பிறந்தது முதலே அதற்கு வயிறு சுத்தமாக இருக்க வேண்டும். குழந்தை பிறந்ததும் முதலில் சில நாள்கள்வரையில் குழந்தையின் மலம் கறுப்பும் பச்சையுமாக இருக்கும். முதல் ஒன்றிரண்டு மாதங்கள் வரையில் குழந்தைக்கு அடிக்கடி மலம் போகும். தாய்ப்பால் குடிக்கும் வரையில் குழந்தைக்கு மலச் சிக்கல் ஏற்படாது. குழந்தைகள் எப்போதும் பால் பருகியதும் மலம் போகும். இப்படி ஒரு நாளைக்குக் குறைந்தது ஆறு அல்லது ஏழு தடவை மலம் கழிப்பது இயற்கையே.

குழந்தைகள் மலம் நாற்றம் அடிக்கக் கூடாது. குழந்தைகளுக்கு மலச்சிக்கல் ஏற்பட்டால்தான் நாற்றம் உண்டாகும். புட்டிப்பால் கொடுக்கத் தொடங்கியதும் பெரும்பாலான பிள்ளைகளுக்கு மலச்சிக்கல் ஏற்பட்டுவிடுகிறது. குழந்தையின் [illegible] உறுப்புகள் நாளுக்கு நாள் பலம்பெற்றுத் திறமையுடன் இயங்கத் தொடங்கியதும், அடிக்கடி மலம் போவது குறையும். பிறகு, இரண்டு மூன்று நாள்களுக்கு ஒரு தடவை மலம் போனாலும் வியப்பதற்கில்லை. இதுவும் இயற்கையே! மலச்சிக்கல் பிரச்சனை ஏற்பட்டால், டாக்டரிடம்தான் காட்ட வேண்டும். நாமாக ஒன்றும் மருந்து கொடுக்கக் கூடாது.

தாய்ப்பால் கொடுக்கும் நாள்களில் தாயின் உணவு பிள்ளையை பெரிதும் பாதிக்கும். தாய் இனிப்பு வகைகளை நிறையச் சாப்பிட்டாலும், பழங்களையும் பேதி மருந்துகளையும் சாப்பிட்டாலும் குழந்தைக்குப் பேதியாகும். ஆகையால் தாய்ப்பால் கொடுக்கும்போது தாய் மலச்சிக்கலுக்கு மருந்து ஒன்றும் சாப்பிடக் கூடாது. பழங்களையும் அளவுடன் சாப்பிட வேண்டும்.

— முற்றும் —

www.padippakam.com

# இது எப்படியிருக்கு?

• மீனா-மூனா •

- இலக்கியச் சந்திப்புக்களிலும், பிற இடங்களிலும் தமிழருக்கென்று கலை, கலாச்சாரம் இல்லை எனப் பேசித் திரிந்த ஒருவர், தற்போது தமிழையும் தமிழ்க் கலாச்சாரத்தையும் வளர்க்கிறேன் என்று ஜேர்மன்காரர் ஒருவருடன் சுற்றித் திரிகின்றாராம்.

- கடந்த வாரம் Ausländeramt ஒன்றில் நடந்தது. சில தமிழ்ப் பெண்கள் தங்களுக்குள், 'எங்கடை ஆட்கள் கிலோக் கணக்கிலை நகையளை அடுக்கிக் கொண்டு எந்த இடத்துக்கு எப்படிப் போறதென்டு தெரியாமல் போறது! இதெல்லாம் ஜேர்மன்காரனுக்குத் தெரியாதோ?' என்று கதைத்துக் கொண்டார்கள். அருகில் அம்மன்போல நகைகளை அடுக்கியிருந்த தமிழ்ப் பெண்ணுக்கு முகம் கறுத்துவிட்டது. திடீரென ரொய்லெற்றுக்குள் போனவர், வெளியே வெறுங் கழுத்துடன் வந்திருந்தாராம்.

- தற்போது அமெரிக்காவிற்குள் கள்ள விசாவுடன் போகலாமாம். 2500 டொலர் தண்டம் அறவிடுகின்றார்கள். பின்னர் கனடாவிலிருந்து அதைத் திருப்பி எடுக்க முடியுமாம். நன்றிக் கடனாக இருக்கலாம் என்று பேசிக் கொள்கிறார்கள்.

- 'தமிழுக்காக உயிர் கொடுக்கிறேன்' என்பவர் பிள்ளைக்குச் சாப்பாடு தீத்தும்போது, 'பிற்ற--- பிற்ற---' போட்டுத் தான் தீத்துவாராம்.

- 'டுல்டுங்' கொடுக்கும்போது 'வெஸ்ற்பாலின்' முழுவதும் போகலாம், வேலை செய்யலாம் என்று பலர் Asyl ஐ இல்லாமல் செய்துவிட்டு 'டுல்டுங்' எடுத்தனாம்.

இப்ப இரண்டு வருட விசா என்பது Asyl இல்லாமல் செய்து Aufenthaltbefugnis ற்கு வேலை நடக்குதாம். தமிழனை ஜேர்மன்காரனைப்போல் அறிந்தவன் வேறு யாருமில்லை.


படிப்பகம்

- இந்தியாவில் போய் செற்றில் ஆகலாம் என்று சேர்ந்தவர்களுக்கு ராஜீவின் கொலையாலை எல்லாம் கலைந்துவிட்டதாம். சிலர் வெளிப்படையாகவே முணுமுணுக்கிறார்கள்.

- Aufenthaltbefugnis கிடைச்சதும் இப்ப Köln 'சேர்ச்சிலே 509 படிகளும் ஏறி இறங்கிற நேர்த்திக் கடன் மும்முரமாக நடக்கிறது. ஒரு நாளைக்குச் சராசரி 25 தமிழ்க் குடும்பங்கள் ஏறி இறங்கினாம்.

- 'அவ்வென்தால்ற்ஸலவ்னிஸ்' எடுத்து இலங்கை போனவர்களைப் போகாதவர்கள் திட்டிக் கொண்டிருக்கிறார்கள். பரவாயில்லை. போனவர்களும் போனவர்களைத் திட்டத் தொடங்கிவிட்டார்கள். அதிலும் போட்டிதான்!

- 'தம்பி ஏனம்மா கறுப்பாய் இருக்கிறான்?' என்று கேட்டதற்கு, 'அவனையும் washing machine ல் போட்டெடுத்தால் வெள்ளையாகிவிடுவான்' என்று தாய் பதில் சொல்லியிருக்கின்றார். தாய் வீட்டில் இல்லாத நேரம் தம்பியை வெள்ளையாக்க வெளிக்கிட்டு, தம்பியை 'வாஷிங் மெசினுக்குள் போட்டுச் சுழட்டி தம்பி இறந்துவிட்டான். மெசினை நிற்பாட்டத் தெரியாமல் வெளியே தாயை அழைக்க அவசரத்தில் ஓடிப் போன அண்ணன் காரில் அடிபட்டு இறந்துவிட்டான் — தமிழ்க் குடும்பமொன்றில் நடந்தது.

- கனடாவில் வாய் தடுமாறிப் பிள்ளைகள் தமிழ் கதைத்துவிட்டால்---சரி! தாய்மார் அடிதான் போடுகின்றார்கள். (வாழ்க தமிழ்!) அன்றைக்குச் சாப்பாடுமில்லை!

- இரண்டு தமிழ்ப் பெண்கள் 'மு'வில் தொடங்கும் இடத்தில் 'மூச்சுவிடாமல் தலைமயிர்ப் பிடிச் சண்டை. கணவன்மார் மெல்லமாகச் சொல்லியும் கேட்கவில்லை. 'மேல்'மாடிக்காரன் (டொச்காரன்) வந்துதான் மயிர்ப்பிடியை எடுத்துவிட்டானாம் — எப்படியும் வீரமறவர் பரம்பரைதானே?!

- ஜி.சி.ஈ. படித்திருந்த ரீச்சர் வெளிநாடு வரும்போது பட்டதாரியாகப் படம் எடுத்து வந்தாராம். இப்ப பட்டம் பறக்கத் தொடங்கிவிட்டதாம் — எத்தனை காலம்தான் ஏமாற்றுவார்?!

www.padippakam.com

- 'சூரிச்சில் வெள்ளை என்ற தமிழனின் வேலை ----! யாழ்ப்பாணத்துச் சாதி விபரங்களை சுவிஸ்காரர்களுக்குச் சொல்லிக் கொடுக்கிறானாம். யாராவது தமிழர்களைப் புதிதாகக் கண்டதும் அவரைக் கேட்டுவிட்டு, 'நீ இன்ன சாதியா?' என்று கேட்கிறார்களாம் சுவிஸ் மக்கள் — தேவைதானா ?!

- எழுத்தாளர்கள் தாங்கள் எழுதிப் பணம் பண்ணுவார்கள். மற்றவர்கள் பெயரில் எழுதிக் கொடுத்தும் பணம் பண்ணுவார்கள். இலங்கையின் சோஷலிஸ்ட் ஒருவர் தமிழ்நாட்டில் இரண்டாவது வேலை செய்கிறார்.

- Düren என்ற இடத்தில் தமிழ்ப் பள்ளிக்கூடம் நடாத்துவது சம்பந்தமான கூட்டம் ஒன்று நடைபெற்றது. அதற்கு அப்பகுதித் தமிழர் பலர் கடும் எதிர்ப்பு. கூட்டத்தில், 'தமிழ் இரண்டாவது மொழி. அது தேவையில்லை' என்று ஒருவர் பேசினாராம்.






# புத்திஜீவியுடன் ஒரு பேட்டி

திருவாளர் புத்திஜீவி அவர்களைக் கடல் சஞ்சிகையின் ஆசிரியர் குழுவினர் பேட்டி கண்டனர்.

(கேள்வி அடையாளம் ? சுழியோடிகளையும், வியப்புக்குறி அடையாளம் ! புத்திஜீவியையும் குறிக்கின்றன)

? வணக்கம் திருவாளர் புத்திஜீவி அவர்களே,

! வணக்கம் வணக்கம் சுழியோடிகளே,

? உங்களை எமது சஞ்சிகைக்காகப் பேட்டி காண்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகின்றோம்.உங்களுக்குப் புத்திஜீவி என்பது யாரால் வழங்கப்பட்ட பட்டம்?

! புத்திஜீவி என்று ஒரு பட்டமும் கிடையாது. நாங்களே எங்களைப் புத்திஜீவிகள் என்று சொல்லிக் கொள்ளுகின்றோம்.

? இப்படிச் சொல்லிக்கொள்வதால் என்ன இலாபம்?

! நாட்டுப்பிரச்சினை போன்ற சமகாலப் பிரச்சினைகளில் விடுபட்டு ஒதுங்கியிருக்க இது நல்லதொரு யுக்தியாக இருக்கின்றது. இது இலாபமில்லையா?

? புத்திஜீவிகளின் சுதந்திரமான கருத்துப் பரிமாறல் களம் என்று சொல்லப்படும் இலக்கியச் சந்திப்புக்களில் உங்களைக் காணவில்லையே?

! இன்று புத்திஜீவிகளான எமக்குள் யார் தலைமை தாங்குவது? என்ற வர்க்கப்போராட்டம் தொடங்கி உள்ளது. எல்லோருமே ஒரு தொழிலைச் செய்துகொண்டிருக்கும் போது எமக்குள் ஏன் இப்படியான போட்டிகள்? இலக்கியச் சந்திப்பு புத்திஜீவிகள் எனச்சொல்லிக் கொள்ளும் புத்திசாலிகளின் சந்திப்பாகும்.

? ஜேர்மனியில் வெளிவரும் தமிழ்ச் சஞ்சிகைகள் பற்றி என்ன சொல்லவிரும்புகின்றீர்கள்?

! எல்லாச் சஞ்சிகைகளிலும் தங்களைப் புத்திஜீவிகளாகக் காட்ட நினைத்து மக்களிடமிருந்து அன்னியப்பட விரும்பும் போக்கே தெரிகின்றது.வாளுடன் செல்ல வேண்டிய எழுத்தாளர்கள் கேடயம் தேடிக்கொண்டிருக்கின்றார்கள். இது எங்களுடைய உரிமையில் தலையிடுவதாகவே நான் கருதுகின்றேன்.

? கடல் சஞ்சிகை பற்றி என்னசொல்லவிரும்புகின்றீர்கள்?
கடலில் ஏதாவது பங்களிப்புச் செய்யவிரும்புவீர்களா?

! கடலில் புத்திஜீவிகளின் கற்பனாவாதம் இல்லாதது பெருங் குறையாக உள்ளது.கேள்வி பதில் போன்ற பகுதியில் பதிலளிக்க விரும்புகின்றேன்.

? நன்றி அடுத்த இதழில் மீண்டும் சந்திப்போம்

www.padippakam.com



www.padippakam.com

# குறுக்கெழுத்துப் போட்டி இல. 5

தயாரிப்பு:- திருமதி. சசிகலா பாஸ்கிர்,
5166 KREUZAU 2

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | 2 | | 4 | 5 |
| | | 8 | | 10 |
| 11 | | 13 | | |
| | 17 | 18 | 19 | 20 |
| 21 | | | | 25 |
| 26 | 27 | | | 30 |
| 31 | | | 34 | |
| 36 | 37 | 38 | | 40 |

இடமிருந்து வலம்:

1 → 4 சிவனின் மனைவியை இப்படியும் அழைப்பர்.
8 ← 10 வயது அதிகரித்தால் ஏற்படுவது. வலமிருந்து இடமாக.
11 → 13 கடவுளிடம் இது உள்ளோர் ஆலயம் செல்வர்.
18 ↔ 20 நாள் – குழம்பியுள்ளது.
21 ↔ 25 இது இல்லாமல் வண்டி ஓடாது – குழம்பியுள்ளது.
27 ↔ 30 பிச்சை. இதை இப்படியும் அழைக்கலாம். குழம்பியுள்ளது.
31 ↔ 34 பெண்கள் கையில் அணிவது. குழம்பியுள்ளது
36 ← 37 நன்றாக அரைத்துச் சாப்பிட இது அவசியம். வலமிருந்து இடமாக.
38 ← 40 இராமாயணத்தில் வரும் ஒரு பாத்திரம். வலமிருந்து இடமாக.

மேலிருந்து கீழ்:

1 → 21 அறிவுடன் இதுவும் சேர்ந்து கொண்டால் வாழ்வில் முன்னேற்றம் அடையலாம்.
2 ↔ 17 இருவருக்கிடையே ஏற்படும் சிறு சச்சரவுகளை இப்படிச் சொல்வர். குழம்பியுள்ளது.
4 → 19 இராசிகளில் ஒன்று.
5 → 30 நமது இந்த சஞ்சிகையை (பெயரை) பரத்தனையில் நோக்கினால் அது.
26 → 36 பெண்களை இப்படியும் அழைப்பர். ஒரு தொழிலும் இவ்வாறே அழைக்கப்படும்.
27 ↔ 37 இரவு – எதிர்ச்சொல். குழம்பியுள்ளது.
30 ← 40 'பணத்தைப் பார்க்காதே இதைப் பார்' என்பார்கள். கீழ்மேலாக

சரியாக விடை எழுதுவோரில் அதிர்ஷ்டசாலி ஒருவருக்கு ஒரு நூல் அன்பளிப்பாக அனுப்பப்படும்.

முடிவு திகதி :- 20. 09. 1991

www.padippakam.com

# குறுக்கெழுத்துப் போட்டி இல. 4
## முடிவுகள்

| | | | | |
|---|---|---|---|---|
| 1 சி | ந் | த | 4 ணை | 5 க |
| று | 7 தா | 8 ண் | 9 டி | 10 ல் |
| 11 வ | 12 ரி | 13 ம | 14 க | 15 ணி |
| 16 ர் | 17 கை | 18 ஏ | ணை | 20 யா |
| 21 அ | றி | 23 வு | 24 வி | 25 பூ |
| 26 மு | 27 ல் | 28 து | ள | 30 வ |
| 31 த | ண | 33 ல் | க் | ர |
| 36 ம் | 37 நா | 38 வி | கு | 40 சு |

**சரியாக விடை அனுப்பியோர்:-**

செல்வி. ஸ்ரீகௌரி
கிருஸ்ணபிள்ளை,
3203 SARSTEDT
[redacted]

ஏ. கஜேந்திரன்,
4100 DUISBURG. 28
[redacted]

**பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

**ஏ. கஜேந்திரன்**

---

**'இதயதீபம்' இறுதி அங்கம்**
**அடுத்த கடல்- அலையில்...**

ஊரவன் எழுதும்
**தங்கச்சி சிரித்தாளோ** -(சிறுகதை)
அடுத்த கடல் அலையில் - - -

# என் நாடே!

கோயில்களில் துப்பாக்கிகளுக்கு
ஊதுபத்தி காட்டிப் பூசை நடக்கின்றது
ஜனநாயகம் அடிக்கடி தூக்கில்
தொங்கவிடப்படுகின்றது
பேச வாய் இருந்தும் ஊமைகள்
ஒப்பாரி எங்களுடைய தேசியகீதம்
சுடலைகள் தெருவுக்கு
கொண்டு வரப்பட்டுவிட்டது
தாயின் மார்பிலிருந்து
பாலுக்குப் பதில்
இரத்தம் கசிகின்றது
இருந்தும்----
இங்கே வாழ்கிறேன்
இந்த மண்ணில்
இறக்கத்தான்
பிடிக்கும்
ஏனெனில் -----
இறப்பில் கூட
வேண்டாம் துன்புறுத்தல்.

# மலடி

குழந்தையாய் இருந்தபோது
கண்ணே மணியே என
அழைத்து மகிழ்ந்த
சமுதாயம் – இன்றைக்கு
குழந்தை இல்லாததால்
"மலடி" என்று
பெயர் சூட்டி
மகிழ்கிறது.

- சோழியபுரத்துக் கண்ணன் -

www.padippakam.com

(22 ம் பக்க தொடர்ச்சி)

## அதிமே.......!

தெரிந்த ஒருவரின் திருமணத்திற்காக, தூரத்திலுள்ள 'ஏசியன் ஷொப்' ஒன்றிற்கு கூறை எடுப்பதற்காக, நானும் கூடிப் போனேன். உரிமையாளர்கள் எங்கள் தமிழர்கள்தான். எத்தனையோ விதமான உணவுப் பொருட்களும், உடைகளும் இந்த ஜேர்மனியில் மலிவு விலையில் கொட்டிக் கிடக்கும்போது இதுவரையில் இந்த 'ஏசியன் ஷொப்'புகள் பக்கம் நான் தலைகாட்டியதே இல்லை. என்றாலும் மிளகாய்த் தூளுக்கும், காஞ்சிபுரத்துக்கும், இருபத்திநாலு 'கரட்'டுக்கும் இருக்கின்ற கிராக்கியை நான் குறைத்தும் மதிப்பிடவில்லை.

நாங்கள் போனபோது கடை உரிமையாளர் அங்கே இல்லை. அவர் லண்டன் போய்விட்டதாக, விற்றுக் கொண்டிருந்தவர்கள் கூறினார்கள். ஜேர்மனியில் இன்னுமொன்று, லண்டனிலும் நாலைந்து 'ஏசியன் ஷொப்'கள் இருப்பதாக தங்கள் 'பொஸ்'ஸின் ஒரு சில தகுதிகளைப்பற்றி எமக்குச் சொல்லிக் கொண்டார்கள். இந்தியாவிலே 150 மார்க்கிற்கு தரமான காஞ்சிபுரம் எடுக்க முடியும். ஆனால், அதைவிடத் தரம் குறைந்ததை 350 மார்க்கிற்கு விற்கின்றபோது இந்தத் தகுதிகள் ஒன்றும் எமக்கு ஆச்சரியத்தைக் கொடுக்கவில்லை. இலாபமில்லாமல் வியாபாரமில்லைத்தான். அதற்காக எட்டு மார்க் பெறுமதியான V.S.O. வை இருபத்தெட்டு மார்க்கிற்கும், கொலண்டுக்குப் போய் நாலு கில்டனுக்கு வாங்குகின்ற ஒரு கிலோ மீனை பதினொரு மார்க்கிற்கும் விற்பது, என்ன நியாயமாகவா தெரிகிறது ?

"திரை கடலோடியும் திரவியம் தேடு" என்பது ஒரு முதுமொழி. ஆனால் நாமெல்லாம் திரை கடலுக்கு மேலால் ஆகாய விமானங்களில் அகதிகளாக அள்ளுப்பட்டு வந்தவர்கள். நாட்டுப் பிரச்சனையைச் சொன்னோம். அதை வளர்ப்பதற்கு சோசல் பணத்திலேயே அள்ளிக் கொடுக்கத் தொடங்கினோம்.

தாயகம், தமிழர், மறவர் என்ற பதங்கள் எல்லாம் சும்மா ஒரு பேச்சுக்குத்தான். ஏனென்றால் தமிழீழம் கிடைக்காமல் நாங்கள் சாப்பிட மாட்டோம் என இங்கே எவனும் பட்டினி கிடக்கவில்லை. அவனவன்....கழுத்து நிறையச் சங்கிலியும் பத்தாயிரக் கார்களில் பவனியும் போய்க் கொண்டிருக்கின்ற இந்த நிலை மாற்றங்

கள் ஏற்படுகின்ற அளவிற்கு நாட்டை மீறிய வீட்டுப் பிரச்சனைகளில் ஆதிக்கங்கள். அதாவது திரவியம் தேடுகின்ற நிலையில் இருக்கின்ற எமது நகர்வுகள். அதற்காக, இப்படி 'ஏசியன் ஷொப்' சாமான்கள் என்று சொல்லிக் கொள்ளையடிப்பதைத்தான் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. நியாயமாக விலைகள் பேசலாம். ஆனால், அதற்கும் எங்கள் தமிழ்களுக்கு வசதி இருக்குதோ? என்னவோ?

நாலாம், ஐந்தாம் குறுக்குத் தெருக்களிலும்; சுருட்டுக் கடைகளிலும் சுத்துப் பழகிக் கொண்ட நாம், "தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்" என்பதால் அவற்றைக் கைவிடுதல் என்பது நடக்கக் கூடிய காரியமா? -----என்ன ?!

இந்தக் கொள்ளையடிப்பைத் தெரிந்துதானோ என்னவோ, எனது நெருங்கிய உறவினர் ஒருவர், ஓர் 'ஏசியன் ஷொப்' திறக்கப் போவதாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார். அவர் நின்று போராடுபவர்களை ஆதரிப்பவர் என்பதும் ஓர் கொசுறுத் தகவல்.

என்ன செய்வது! மாற்றமடையாத இந்தச் சமூகம் தொடர்ந்து நாறுமட்டும், இந்தச் செந்தமிழ் வியாபாரிகளின் நச்சுத்தனங்கள் இலாபமடைந்து கொண்டேதான் இருக்கும்.

■ ■ ■ ■

சினிமா என்பது ஒரு பொழுதுபோக்கு அம்சமே! இந்த அம்சத்துக்குள்ளே நல்ல கருத்துக்களை எதிர்பார்ப்பது ஒன்றும் தவறான மொக்கோரம் அல்ல. எமது தேடல்கள் தோல்வியைத் தழுவும்போது, அதே பொழுது போக்குக்குள் நாமும் போக வேண்டியதுதான். ஆனால் மூழ்குவதுதான் ஆபத்தானது. ஏன் என்றால் வெளிநாடுகளுக்கு கலைச்சேவை செய்ய வருகின்ற நடிக, நடிகையர்களுக்கு பொன் மாலைகள் போடுவதும், விலையுயர்ந்த பொருட்களைப் பரிசளிப்பதும் இந்த மூழ்குதலின் ஒருபக்க விளைவுகள்தான்.

புதுமுகங்களும், புதிய படங்களும் பெருக்கெடுத்து வருகின்ற இன்றைய சூழலில், பழைய படமொன்றைப் பார்க்கக் கூடிய இனிய கூடலின் பின்பு------

படத்தின் பெயர்-குடியிருந்த கோயில்

நற்பண்புகளும், வீரமும், அழகும் நிறைந்த கதாநாயகன். அவனைக் கனவில் காதலித்து பின்பு நிஜமாக்கும் நாற்குணமும் (படத்தில் மட்டும்) ஒருங்கே அமைந்த கதாநாயகி. என்

னென்ன கெட்ட பழக்கங்களோ----! அனைத்தையும் பார்த்து உருவாக்கப்படும் வில்லன். இறுதியில் நாயகன் வில்லனை வீழ்த்தி, நாயகியை மணம் முடிக்க, நகைச்சுவை நடிகனை ஒர் சிலேடைப் பொடி தூவ வைத்து வணக்கம் காட்டுவார்கள்.

இதுதான் அநேக திரைப்படங்களின் படிமுறைகள். ஆனால் இந்தப் படிமுறைகளுக்கு அடித்தளம் இட்டதே MGR இன் படங்கள்தான். மேலும், MGR இன் படங்களில் இது இன்னும் அழுத்தமாக, ஒர் குடும்பத்தோடு சேர்ந்திருந்து பார்க்கக் கூடிய முறையில் சொல்லப்பட்டிருக்கும். வெளிநாடுகளில் வாழ்கின்ற நாங்கள் எல்லாம், ஏதேதோ படங்களையெல்லாம் பார்க்கக்கூடிய வசதிகளுடன் இருக்கும் போது, அந்தக்காலக் குடும்பப் படங்களில் அப்படியொன்றும் புதுமைகள் இல்லைத்தான். என்றாலும் கூட; தாயை முதன்மைப் படுத்த வேண்டிய தனயனின் கடமையும், ஒருவனுக்கு ஒருத்தியாக வாழ வேண்டிய பண்புகளும், அதற்குச் சற்றும் குறையாத ஆணின் தன்மைகளும், MGR படங்களில் அடி அடித்ததுபோலச் சொல்லப்பட்டிருக்கும்.

இது, MGR இரு வேடங்களில் நடித்த படம். தாய்க்கு முதலிடம் கொடுக்கப்படுகிறது. குடியிருந்த கோயிலும் அவன்தானே!

இரு MGR களும் சகோதரர்கள். அவர்களுடைய சின்ன வயதிலே, தந்தை வில்லனால் கொல்லப்படுகிறார். தந்தையின் உயிரற்ற தலையை தாய் தாங்க மூத்தவன், 'பழிக்குப் பழி வாங்குவேன்' என சபதமிடுகிறான். பின்பு, தந்தையின் உடலத்திற்கு தீ மூட்டி, ஊரைத் துறந்து அனைவரும் இரயிலில் பயணமாகிறார்கள். இடையில் ஒரு தரிப்பு நிலையத்தில் தண்ணீர் எடுப்பதற்காக மூத்தவன் இறங்குகின்றான். திரும்பி வருவதற்குள் இரயில் புறப்படுகிறது. 'அம்மா' என்ற தொடர்ச்சிக் குரலெடுத்து ஓடுகிறான் -----ஓடுகிறான். அந்த நேரம் பார்த்தா வில்லனைப் பொலிஸ் துரத்தி வர வேண்டும்?! (உஷ், குழம்பாதீர்கள். பார்ப்பது தமிழ்ப்படம். நடிப்பது MGR.) வில்லனின் பார்வையில் ஓடுகின்ற பையன் தெரிந்ததும் தன்னுடன் தூக்கிக் கொண்டு போகின்றான்.

மூத்தவன் கொள்ளைக்காரனாகவும், இளையவன் நற் பண்புகள் கொண்ட நல்லவனாகவும் மாறுகி

www.padippakam.com

றார்கள். இருவரையும் காதல் பண்ணா இரு பெண்கள். நிஜ வாழ்க்கையிலும் பெண்கள் இந்த வரையறைக்குள்தான் என்றால், பல ஆண்கள் கூட சண்டைக்கு வரக் கூடிய இன்றைய குழப்பமான விடுதலைச் சூழலுக்குள், மடமைகளுக்கு முண்டு கொடுக்கும் வாத்தியாரின் படங்களைப் பற்றிய விமர்சனம் சுத்த முட்டாள்தனம் என முறுமுறுப்புகள் தோன்றலாம். ஆனால், MGR படங்களில் பல நல்ல விடயங்கள் தொடர்ச்சியாக வலியுறுத்தப்பட்டன என்பதை யாரும் மறுப்பதற்கில்லை.

காதல் செய்யும் பெண்களாலும், தாயாலும் பிரிந்த சகோதரர்கள் இணைகிறார்கள். உண்மைகளையும் உணர்கிறார்கள். அடுத்து பழி வாங்கும் படலம்---- சத்தியம் செய்தவன் கூடுதலாக சண்டை இசை போட வைக்கின்றான். இறுதியில் வில்லனை சினிமாப் பொலிஸ் கொண்டு போகிறது.

வழக்கமாக பழைய படங்களில் இடம் பெறும் பாடல்கள் அனைத்தும் இரசிக்கக் கூடியவை. பாடலாசிரியரின் ஜொலித்துவரும், பாடுபவர்களின் குரல் வளமும் இசையுடன் இணைந்து ஓர் அழுதலிருந்து பணைப்பவை என்று சொன்னால் மிகையாகாது. இந்தப் படத்திலும் அநேக பாடல்கள் இதே வகையைச் சேர்ந்தவைதான். கமராவை, இயக்கத்தைப்பற்றி எல்லாம் குறிப்பிட்டுச் சொல்கின்ற அளவிற்கு ஒன்றுமில்லை என்பதைவிடவும், இவை சம்பந்தமான எனது அறிவும் ஒரு காரணமாக இருக்கலாம்.

12வது இலக்கியச்சந்திப்பு

10.08.1991ல் 5013 ELSDORF/RHLD-ல் நடைபெறவிருந்த 12வது இலக்கியச்சந்திப்புத் தவிர்க்க முடியாத காரணங்களினால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. எனினும் வெகுவிரைவில் இலக்கியச்சந்திப்பைத் திட்டமிட்டபடி எல்டோர்ஃபில் நடாத்த ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

இங்ஙனம்

12வது இலக்கியச்சந்திப்புச் செயற்குழு சார்பில்

IM WINKEL-2,
5013 ELSDORF/RHLD

TEL 02271/66527



படிப்பகம்

www.padippakam.com



# நிர(அ)ந்தரம்

திருப்பி அனுப்பப் போகிறார்கள் என்ற செய்தி பரவலாகியபோது சொந்த மண்ணைப்பற்றிய துக்கங்களை வெளிச்சத்துக்கு கொண்டு வருவதில் அக்கறை செலுத்தியவர்களும்; ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள், மௌன ஊர்வலங்கள் என்று ஒன்று திரண்டவர்களும்; இப்படி ஊர்வலங்களில் கலந்து கொள்ளாதவர்களைத் திட்டித் தீர்த்தவர்களும்; மக்களின் பிரச்சனைகளை வெளிக் கொணர்கிறோம் என்று ஊர்வலமாகி, தானைத் தலைவனாக இனங்காட்டத் தொண்டை கிழியக் கத்தி, ஊர்வலத்தின் நோக்கத்தையே தப்பாக்கித் திசை மாற்றியவர்களும்; 1988 இற்கு முன் வந்தவர்களுக்கே 'அவ்வென்தாஸ்ற்வெயுக்னிஸ்' என்ற தாரக மந்திரத்தால் மௌனமாகிவிட்டார்கள்.

'ஏதோ, தலை தப்பியது தம்பிரான் புண்ணியம்' என்ற எண்ணமோ அல்லது புதிய விசா கிடைத்ததால் நிரந்தரமாக இங்கே தங்கிவிடலாம் என்ற மனக்கோட்டைச் சிந்தனைகளோ தெரியவில்லை!

எது எப்படியாயினும் 'அவ்வென்தால்ற்வெயுக்னிஸ்' என்ற புதிய அனுமதியின் உண்மை விளக்கங்கள் முற்று முழுதாக விளக்கப்பாட்டிற்கு வராவிடினும் இது ஒரு அரசியல் அனுமதியேயாகும். அதாவது, இந்நாட்டில் ஏற்படப்போகும் அரசியல் மாற்றங்களுக்கு (சூழ்நிலைகளுக்கு) ஏற்ப இதன் தகுதிகளும் மாறுபடலாம். மற்றும், இந்த அனுமதி தொடர்ந்து வழங்கப்பட வேண்டும் என்பதற்கான எவ்வித உத்தரவாதங்களும் இல்லை.

1988 இற்கு முன்பு வந்தவர்களில் அநேகமானோர் உணவு விடுதிகள் தொடக்கம் தொழிற்சாலைகள் ஈறாகத் தொழில் புரிகின்றனர். இவர்களைத் திடீரெனத் திருப்புவதனால் பல முதலாளிகளுக்கு தொழில் தெரிந்த தொழிலாளர்களைத் தேடுவதில் சிரமம் ஏற்படலாம். இப்படியான சிரமங்களைத் தீர்ப்பதற்குரிய கால அவகாசத்தை ஏற்படுத்தும் நோக்கிலேயே இந்தப் புதிய அனுமதி நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதோ எனவும் சந்தேகமுற வேண்டியுள்ளது.

மேலும், 'அவ்வென்தால்ற்ஸவ்னெஸ்' என்ற வதிவிட உரிமை பெறுவதற்கு முறையான அனுமதியுடன் ஜேர்மனிக்கு வந்தோரே தகுதி உடையவர்கள் என்றும் தெரிய வருவதால், 1988 இற்கு முன் வந்தோரின் நிலையிலும் 'நிரந்தர வதிப்பு' என்ற பேச்சிற்கே இடமில்லை.

இப்படியான தற்காலிகங்களில் பிறந்த குருட்டு நம்பிக்கைகளால் நிரந்தரம் என்ற கற்பனாவாதத்தில் ஊறியவர்கள் தாய் மொழியை மறக்க முற்படுவதுமட்டுமன்றி, 1988 இற்கு பிறகு வந்தவர்களின் நிலையை எண்ணிப் பார்க்கவோ அல்லது அவர்களின் முனைவுகளுக்கு வழி காட்டவோ முற்படாமல் மௌனிகளானது சிந்தையானாலும் கவலைக்குரியது.

அழிவுகளுக்கும் பிணிகளுக்கும் பஞ்சம் பட்டினிக்கும் இடையில் பணத்தை வாரி இறைத்து உயிரைக் கையில் பிடித்தபடி வந்தவர்கள், தமது நிலையை இந்நாட்டில் தெளிவாக்க வற்புறுத்தல்களை மேற்கொள்ள வேண்டுமாயினும், அவர்களைப் பிறிம்பு காட்டாமல், அவர்களுக்காகக் குரல் கொடுக்கவும் சகல மட்டங்களிலும் உள்ளோர் முன்வர வேண்டும்.

இதைவிடுத்துப் புதியவர்களை அலட்சியப்படுத்தி, தாம் இங்கே நிரந்தரமாக வாழலாம் எனக் கனவு காண்பவர்கள், புதியவர்களின் பின்னால் தாய் மண்ணை மிதிக்க வேண்டிய நிலை ஏற்படலாம். எனவே புதியவர்கள், பழையவர்கள் என்ற பாகுபாட்டை மறந்து, எல்லோரும் உயிருக்கு உத்தரவாதமற்ற அகதிகள் என்ற நிலையில் முன்னெடுப்புகளை செய்வதன் மூலமே உயிர் வாழ்வதற்கான உத்தரவாதங்களை உறுதிப்படுத்த முடியும்.

---

'கடல்' பற்றிய 'அறிமுகம்' செய்த சஞ்சிகைகளுக்கு எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

— சுழியோடிகள் —

(1) **'கலை விளக்கு'**
- இருமாதம் ஒரு முறை -
தனிப்பிரதி - 1.50 DM.
1 வருடச் சந்தா - 15 DM. [தபாற் செலவு உட்பட.]
MR. S. PACKIYANATHAN,
DROOTE -13,
4600 DORTMUND-14, GERMANY

(2) **'மண்'** - இலவச மாத சஞ்சிகை -
60Pf முத்திரைகளை அனுப்பி பெறலாம்.
MR. V. SIVARAJAH,
ANGERTALER STR. 98,
4100 DUISBURG 28, GERMANY.



படிப்பகம்

# எப்போது விடிவு?

பெண் என்பவள் பல வழிகளில் ஒடுக்கப்பட்டவள். பெண் குழந்தை பிறந்து விட்டால் வருந்தாத பெற்றோர்கள் இல்லை எனலாம். அவளை எப்படியாவது கலியாணச் சந்தையில் தள்ளிவிட வேண்டும். அதற்குப் பணம் தேட வேண்டும். மேலும், ஒருவனின் கையில் பிடித்துக் கொடுக்கும்வரை பாதுகாக்க வேண்டும் — இவ்வாறு எமது தமிழ்க் குடும்பங்களின் எண்ணங்களில் இன்றும் கூட மாறவில்லை.

இன்று சில பெண்கள் ஆயுதபாணியாய் களத்தில் நிற்பது 'பெண்கள் உரிமைப் போராட்டமாக' மாயையை ஏற்படுத்தினாலும், இது பெண் விடுதலைக்கான முன்னெடுப்பாகாது.

பெண்களில் பலரே பெண்களும் சமமாக வாழ வேண்டும் என்பதை ஏற்க மறுப்பது வேதனையான வேடிக்கையாகும். பெண் குழந்தை பிறந்தால், 'ஒரு வீரனை எதிர்பார்த்தன். பெட்டைக் குட்டியாய் பெத்து கஸ்டப்படுறன். இவளை ஒருத்தன்ர கையிலை பிடிச்சுக் கொடுக்கும்வரை வயிற்றிலை நெருப்பைக் கட்டிக் கொண்டு வாழ வேண்டும்' எனக் கவலைப்படும் தாய்----!

'என்ரை புருசன் எனக்கு எந்தக் குறையும் விடேலை. நகை என்றால் நகை. புடவை என்றால் புடவை. இதுக்குப் பிறகும் என்ன வேண்டும்? அவர் சாப்பிட்ட பிறகுதான் நான் சாப்பிடுறனான்' எனப் பெருமையோடு கூறும் மனைவி----!

பெண் பிறந்ததிலிருந்தே படிப்படியாக மனோரீதியாக அடிமைத்தனத்திற்கு உள்ளாக்கப்படுகிறாள்.

சிறுவர்களின் கல்விக்காக கணக்கின்றி வாரி இறைக்கும் பெற்றோர், சிறுமிகளின் விடயத்தில் கணக்குப் பார்க்க ஆரம்பித்துவிடுகிறார்கள். சிலர் ஒருபடி மேலே போய், நாளைக்கு ஆருக்கோ கழுத்தை நீட்டப் போகிறவளுக்கு கையெழுத்துமட்டும் போடத் தெரிந்தால் போதாதா என்று, கல்விக்கு முற்றுப் புள்ளி வைக்கிறார்கள்.

மாமியார், தான் திருமணம் செய்யும்போது பட்ட இன்னல்களை மறந்தவளாய், மருமகளாகப் போகிறவள் வீட்டில் மனச்சாட்சி இல்லாமல் சீதனம் கேட்கிறாள்.

பெண் வீட்டார் கூட, மாப்பிள்ளைகளின் தகமைக்கேற்பப் பணம் கொடுக்கப் போட்டா போட்டி போடுகிறார்கள். பேரம் சாதகமாகும்போது பெண்ணின் விருப்பு வெறுப்புகள் அலட்சியப்படுத்தப்பட்டு ஆராத்தி எடுக்கப்படுகிறது.

மனைவியை இழந்த கணவன் பிள்ளைகளைக் காரணம் காட்டி மறுமணம் செய்கிறான். ஆனால் கணவனை இழந்த மனைவியின் நிலையோ பரிதாபம்! பிள்ளைகளுடன் ஆதரவின்றி 'விதவை' என்ற பட்டத்துடன் வெள்ளை உடையில் உணர்ச்சியற்ற மரமாய் ஒதுக்கப்படுகிறாள்.

சுப காரியங்களில், சபை சந்திகளில் கலந்துகொள்ள மறுக்கப்படுகிறாள்.

ஒரு ஆண் தன் மனைவியைத் தாழ்வாகவே நடத்துகிறான். 'தான் ஆள்பவன் அவள் ஆளப்படுபவள்' என்ற எண்ணமே அவன் மனதில் ஓங்கி நிற்கிறது.

நன்கு படித்து வேலைக்குப் போகும் பெண்கள் கூட தமது திருமணத்திற்காகப் பணம் சேர்க்கிறார்கள்.

பெரும்பாலான பெண்கள் அடிமைத்தனத்தை ரசிக்க ஆரம்பித்துவிட்டார்களோ என்று கூட எண்ணத் தோன்றுகிறது.

இன்று எமது சமூகத்தில் மட்டுமல்ல — உலகமெங்குமே பெண்கள் அலங்காரப் பதுமைகளாகவும் வியாபாரப் பொருளாகவும் ஆக்கப்பட்டாலும் கூட, எமது சமூகத்திலேயே பெண்கள் மிகவும் பின் தங்கிய நிலையிலுள்ளார்கள்.

இவற்றை மீறி சில பெண்கள் விழிப்புணர்வை ஏற்படுத்த முனைகின்றாலும் இவர்களின் அணுகுமுறை கூட ஒழுங்கான வழிகாட்டலின்றி குடத்துள் இட்ட விளக்காகவே உள்ளது.

பெண்களின் அடிமைப்பாட்டிற்குரிய உண்மையான காரணங்களைக் கண்டறிந்து பரிகாரம் தேடப் பாடுபடாமல், மொத்த ஆண்களையுமே பரம வைரியாகப் பார்த்து அல்லது கணிப்பிட்டு தவறான செயற்பாட்டால் தங்களைத் தனிமைப்படுத்திக் கொள்கிறார்கள்.

பெண்ணுரிமைக்காகப் பாடுபடுபவர்கள் பெண்களுக்கு விழிப்புணர்ச்சி ஏற்படுத்துவதுமட்டுமன்றி, ஆண்களின் புரிந்துணர்வுகளை வளர்ப்பதன்மூலமே தமது முயற்சிகளைப் பயனுள்ளதாக்க முடியும்.

சமூகத்தில் ஆண், பெண் இருபாலாருக்கும் எவ்வளவு பங்குண்டோ அவ்வளவு தூரம் சமூகத்துடன் பின்னிப் பிணைந்துள்ள பெண் விடுதலையை ஆண், பெண் இருபாலாருமே முன்னெடுக்க முடியும்.

www.padippakam.com

அட்டையிலுள்ள படத்திற்கு பொருத்தமாக,

எமக்குக் கிடைத்த வசனங்கள் :-

- ஏன் பிறந்தாய் மகனே
  ஏன் பிறந்தாய்

  அந்நிய நாட்டில்--- அந்நிய வாழ்வில்
  'அ...' கூடத் தெரியாமல்
  ஏன் பிறந்தாய் ?!

  — செல்வி. சி. சிவதர்சினி,
  4100 DUISBURG. 28.

- 'நான் வெள்ளையாகப் பிறந்தால்
  இனி ஜேர்மன் சிற்றிசன்' என்று
  அப்பா சொல்லுகிறார்.

  — செல்வன். சி. சிவகாந்த்,
  4100 DUISBURG. 28.

- எனது பிறந்த நாளுக்கு செலவான
  பணத்தை, எனது பெற்றோர்
  அநாதைச் சிறுவருக்கு அனுப்பியிருந்தால்,
  வீரிட்டுச் சிரித்திருப்பேன்.

  — செல்வன். சி. சிவசங்கர்,
  4100 DUISBURG. 28.

<u>அட்டைப்பட</u> <u>வசனம்:</u>

செல்வி. சி. சிவதர்சனி.
4100 DUISBURG. 28.

**வாசகர்களே, சந்தாதாரர்களே!!!**
**'கடல்' முகவரி மாற்றத்தைக் கவனிக்கவும்.**



படிப்பகம்

www.padippakam.com

இது ஒரு இலவச மாதாந்த வெளியீடு. தபாற் செலவாக 6x60 பெனிக் முத்திரைகளை அனுப்பி ஆறு மாத வெளியீடுகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

இச் சஞ்சிகையில் இடம்பெறும் ஆக்கங்களின் கருத்துக்கள் ஆக்கதாரர்களின் கருத்தாகும்.

புனைபெயரில் எழுதுபவர்கள் தங்கள் சொந்தப் பெயரைக் குறிப்பிடல் வேண்டும்

ஆக்கதாரர்,வாசகர்,யாவரும் கடல் பற்றிய

தொடர்புகளுக்கு

"KADAL",
POSTFACH 1425,
4018 LANGENFELD.

Die Erstellung dieses Heftes wurde durch das Diakonische Werk des Evang. Kirchenkreises Leverkusen ermoglicht.

CHANCHIVE
Danmarksgade 10
7500 Holstebro
Danmark

KAD 1

படிப்பகம்